

# ஒரு புதிய ஜீவியத்தின் மார்க்கம்

## கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதின் பொருளை புரிந்து கொள்ளுதல்

ஜாய்ஸ் மேயர்

நியூயார்க் டைம்ஸின் சிறந்த விற்பனையாளர்களில் முதலிடம் பிடித்தவர்

# ஒரு புதிய
# ஜீவியத்தின்
# மார்க்கம்

# ஒரு புதிய ஜீவியத்தின் மார்க்கம்

## கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதின் பொருளை புரிந்து கொள்ளுதல்


## ஜாய்ஸ் மேயர்



JOYCE MEYER MINISTRIES®

Nanakramguda, Hyderabad - 500 008

If you purchase this book without a cover you should be aware that this book may have been stolen property and reported as "unsold and destroyed" to the publisher. In such case neither the author nor the publisher has received any payment for this "stripped book."

Unless otherwise indicated, all Scripture quotations are taken from THE AMPLIFIED BIBLE: Old Testament. Copyright © 1962, 1964 by Zondervan Publishing House (used by permission); THE KING JAMES VERSION; and from THE AMPLIFIED NEW TESTAMENT. Copyright© 1958 by the Lockman Foundation (used by permission).

The author would like to acknowledge that the story used in chapter 3, on pages 11-13 is on original sermon illustration by Dr. Monroe Parker and is used by permission of Gospel Projects Press, P.O. Box 643, Milton, FL 32572: copyright 1977.
www.childrensbibleclub.com

Copyright © 2014 by Joyce Meyer Ministries - Asia

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, or stored in a database or retrieval system, without the prior written permission of Joyce Meyer Ministries - Asia.

Joyce Meyer Ministries - Asia
Nanakramguda, Hyderabad - 500 008
Phone: +91-40-2300 6777
Website: www.jmmindia.org

A New Way of Living - Tamil
*Understanding What It Means to Accept Christ*

*Printed at:*
Caxton Offset Pvt. Ltd.
Hyderabad - 500 004

# பொருளடக்கம்


1. நீங்கள் என்றும் எடுத்திராத மிக முக்கியமான தீர்மானம் 1
2. நாம் எல்லோரும் பாவஞ்செய்தோம் 6
3. இது அர்ப்பணத்தின் நேரம் 13
4. ஒரு புதிய ஜிவியத்தின் மார்க்கம் 21
5. ஒரு புதிய சிந்தையின் மார்க்கம் 32
6. ஒரு புதிய பேச்சின் மார்க்கம் 41
7. உங்களைப் பற்றிய ஒரு புதிய கண்ணோட்டம் 47
8. பயத்திற்கு பதிலாக விசுவாசம் 55
9. வாழ்க்கை அனுபவியுங்கள் 60

இரட்சிப்புக்கான ஒரு ஜெபம் 65

ஆதாரமும், அறிவுரைகளும் 67

அத்தியாயம் 1

# நீங்கள் என்றும் எடுத்திராத மிக முக்கியமான தீர்மானம்

உங்கள் வாழ்வைக் குறித்து நீங்கள் அதிருப்தியுடன் இருக்கிறீர்களா? அப்படியிருந்தால், அது நீங்கள் மட்டுமல்ல திரளானோர் களைப்புற்றோராக, சோர்வுற்றோராக, வெறுமையானவர்களாக, நிறைவற்ற நிலையில் உள்ளனர். பலர் மதத்தில் இப்படிப்பட்ட தங்கள் நிலைக்குப் பரிகாரம் காண எத்தனிக்கிறார்கள். ஆனால் அதன் விளைவாக தங்களால் கைக்கொள்ள முடியாத, ஜீவனற்ற, அர்த்தமற்ற இன்னும் பல விதிமுறைகளால் தங்கள் வாழ்வின் பாரத்தைக் கூட்டிக் கொள்கின்றனர். உங்களின் வெறுமையான, குழப்பமான, குற்ற உணர்வு நிறைந்த வாழ்க்கைக்குப் பரிகாரம் காண நீங்கள் மதத்தை முயற்சித்திருக்கலாம். ஆனால் அது தேவனிடம் முயற்சித்ததாக அர்த்தமாகாது.

நீங்கள் நேசிக்கப்படவேண்டுமென்றால் உங்களுக்கு ஒரு நண்பர் தேவையென்றால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்றால், உங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் வேண்டுமென்றால்... உங்கள் தேவைகளுக்கு இயேசுகிறிஸ்துவே

பதில். உங்களை ஒரு புத்தம் புது படைப்பாக மாற்றி, உங்களுக்கு ஒரு புது வாழ்வு கொடுக்க அவர் காத்துக் கொண்டிருக்கிறார்.

உங்கள் வாழ்க்கை திருப்திகரமாக இல்லாவிட்டால் நீங்கள் சிலவற்றை மாற்றியாக வேண்டும். நாம் எதைச் செய்து கொண்டிருந்தோமோ, அதையே தொடர்ந்து செய்து கொண்டிருந்தால், நம்முடைய வாழ்க்கை எப்படியிருந்ததோ, அப்படியே தொடர்ந்து இருக்கும். நீங்கள் ஒரு தீர்மானம் எடுப்பது அவசியம். அதுவே உங்கள் வாழ்வில் மற்றெல்லாவற்றைப் பார்க்கிலும் நீங்கள் என்றும் எடுத்திராத மிக முக்கியமான தீர்மானம்.

நீங்கள் தெரிந்தெடுக்கும் வேலை, நீங்கள் படிக்க தெரிந்தெடுக்கும் கல்லூரி, நீங்கள் யாரை திருமணம் செய்யப்போகிறீர்கள், உங்கள் பணத்தை எவ்விதம் முதலீடு செய்யப்போகிறீர்கள், அல்லது எங்கு வாழப் போகிறீர்கள் ஆகிய இவை எல்லாவற்றைப் பார்க்கிலும் இது மிக முக்கியமான தீர்மானம். இந்தத் தீர்மானம் உங்கள் நித்தியத்தோடு சம்பந்தப்பட்டது. நித்தியம் என்பது முடிவில்லா காலம். நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வை எங்கு செலவிடுவோம் என்று தெரிந்திருக்க வேண்டும். மரணத்திற்கு பிறகு வாழ்வுண்டு. மரணத்தோடு உங்கள் வாழ்வு முடிவடைவதில்லை. மாறாக மரிக்கும் பொழுது நீங்கள் வேறு ஓரிடத்தில் வாழத் துவங்கி விடுகிறீர்கள். மரணத்தை ஒரு சூழற்கதவோடு ஒப்பிட்டு பேசுவார்கள். நீங்கள் ஓரிடத்தை விட்டு வேறொரு இடத்திற்குப் போய் விடுகிறீர்கள்.

நீங்கள் இந்த பூமியில் தேவனோடு உறவு கொண்டு வாழ்ந்து, நித்தியத்திலும், அவரோடு இணைந்து வாழ விரும்புகிறீர்களா? அப்படிச் செய்ய வேண்டுமானால், நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம். நமக்கு ஒரு இரட்சகர் தேவை. நம்முடைய

பாவத்திற்கு பரிகாரம் காணவே, தேவன் தம்முடைய ஒரே குமாரனை அனுப்பினார். அவர் சிலுவையிலறையப்பட்டு, நாம் இழைத்த தவறுகளுக்காக தம்முடைய குற்றமில்லா இரத்தத்தை சிந்தினார். அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டார். ஆனால் மூன்றாம் நாள் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தவராய், இப்பொழுது பரலோகத்திலே பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார். தேவனோடு உறவு கொண்டு சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்வதற்கு அவர் ஒருவரே உங்கள் நம்பிக்கையாக இருக்கிறார்.

நம்முடைய பாவத்தின்று நாம் இரட்சிக்கப்படுவதற்கு, நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டு இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டு, அவரை தேவன் மரித்தோரிடத்தினின்று எழும்பப்பண்ணினார் என்று நம்முடைய இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது.

> என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் (அவரில் நம்பிக்கை வைத்து, அவரையே அண்டிக் கொண்டு சத்தியத்தை சார்ந்து), இரட்சிக்கப்படுவாய். — ரோமர் 10:9

இவ்விதமாக விசுவாசிப்பதென்பது அறிவுப்பிரகாரமாக ஒப்புக் கொள்ளுதலை விட மேலானது. இது உண்மையானது, இதயத்தை தொடுவது ஆகும். அநேக ஜனங்கள் தேவன் ஒருவர் உண்டென்று நம்புகிறார்கள். ஆனால் அந்த தேவனுக்கு தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிப்பதில்லை. தேவனே ஜீவனுக்கதிபதியாக இருக்கிறார். உங்களுடைய வாழ்வு விருப்பத்துடனும், சந்தோஷத்துடனும் அவருக்கே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்று தேவன்

விரும்புகிறார். தேவன் உங்களை ஒரு சுய சித்தத்தோடு சிருஷ்டித்திருக்கிறார். நீங்கள் அவரை தெரிந்தெடுத்தாக வேண்டும் என்று வலுக்கட்டாயமாக நிர்பந்திப்பதில்லை. ஆனால் நீங்கள் இந்த விஷயத்தில் எடுக்கும் தெரிந்தெடுப்பே பூலோகத்தில் உங்கள் வாழ்க்கையின் தரத்தை வித்தியாசமாக்குவதும், நீங்கள் மரிக்கும் பொழுது உங்கள் நித்தியத்தை எங்கு செலவிடுவீர்கள் என்பதை நிர்ணயிப்பதாகவும் அமையும்.

உங்கள் வாழ்வை நல்ல விதமாக நடத்தி வந்திருக்கிறீர்களா? அப்படி இல்லாவிட்டால் உங்களை படைத்தவரும், நீங்கள் உங்களைப் பற்றி அறிந்திருக்கிறதைவிட மிகத் தெளிவாக உங்களைப் பற்றி அறிந்திருகிறவருமானவரிடத்தில் நீங்கள் ஏன் திரும்பக் கூடாது? நான் ஒரு மோட்டார் வாகனத்தை வாங்கி அதில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால், அதை நிவிர்த்தி செய்யும்படிக்கு அதை தயாரித்து கொடுத்தவர்களிடத்தில் அதை திருப்பிக் கொண்டு போவோம். தேவனிடத்திலும் இதே கொள்கைதான். அவர் உங்களை படைத்திருக்கிறார். அவர் உங்களை மிகவும் நேசிக்கிறார்.உங்கள் வாழ்க்கை உங்களுக்கே திருப்திகரமாக இல்லாவிட்டால், அதை சரி செய்யும்படிக்கு அவரிடத்திற்கே அதை கொண்டு செல்லுங்கள்.

நான் ஏற்கனவே சொன்ன வண்ணமாக நீங்கள் ஒரு தீர்மானம் எடுக்கும் வரைக்கும் ஒன்றும் மாறப் போவதில்லை. நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புகிறீர்களா? உங்கள் பாவத்தை மாத்திரம் அல்ல உங்கள் வாழ்க்கையையும் தேவனுக்கு அர்ப்பணிக்க ஆயத்தமாக இருக்கிறீர்களா? உங்கள் பாவ வழிகளை விட்டுத்திரும்பி, தேவனோடு தேவனுக்காக வாழுகின்ற ஒரு புத்தம் புது வாழ்க்கையை கற்றுக் கொள்ள ஆயத்தமாய் இருக்கிறீர்களா? அப்படி இருப்பீர்களானால் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருங்கள். ஏனெனில் நீங்கள் கற்பனை

செய்யும் மிகச் சிறந்த வாழ்வை விட ஒரு அதிமேன்மையான வாழ்வு உங்களுக்காக காத்திருக்கிறது. இதுஅனைவருக்கும் கிடைக்கக்கூடிய வாழ்வாய் இருக்கிறது. யாரும் இதற்கு விலக்கப்பட்டவர்கள் அல்ல. உங்கள் எதிர்காலத்தைப் பற்றி தேவன் இவ்விதமாக கூறுகிறார்:

> நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர்சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.
>
> — எரேமியா 29:11

உங்களுக்காக வேறு யாரும் எந்தத் தீர்மானமும் செய்ய முடியாது. நீங்கள், நீங்கள் மட்டுமே அதைச் செய்தாக வேண்டும். எப்படிப்பட்ட தரமான வாழ்க்கையை வாழ விரும்புகிறீர்கள்? உங்கள் சமுதாயத்திலே இன்று நீங்கள் காணுகிற மாதிரியை நீங்கள் பின்பற்ற விரும்புகிறீர்களா? உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததில்லை; இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதும் இல்லை என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. (1 தீமோத்தேயு 6:7). தேவனே ஆதியும், அந்தமும், துவக்கமும் முடிவுமாக இருக்கிறார். ஆதியிலே அவர் இருந்தார். முடிவிலும் அவர் இருப்பார். ஒவ்வொரு நபரும் தேவனுக்கு முன்பாக நின்று, தன் வாழ்வைக் குறித்த கணக்கை அவரிடத்தில் ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 14:12). அதற்கு ஆயத்தமாவதற்கு இதுவே காலமாய் இருக்கிறது. நான் எப்பொழுதும் சொல்வது, "நீங்கள் ஆயத்தமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் இயேசு வருகிறார்." இப்பொழுதே ஆயத்தமாகி விடுங்கள், இப்பொழுதே சரியான தீர்மானம் எடுங்கள். ஏனெனில் தாமதித்தால் காலம் கடந்து விடும்.

அத்தியாயம் 2

# நாம் எல்லோரும் பாவஞ்செய்தோம்

நாம் அறிந்திருக்கிற தேவனுடைய சித்தத்துக்கு மனப்பூர்வமாக கீழ்ப்படியாமற்போவதே பாவமாகும். ஒருக்காலும் பாவஞ்செய்யாதவர்கள் என்று யாரும் பூமியின் மேல் இல்லை. (ரோமர் 3:23, பிரசங்கி 7:20) இது ஒரு கெட்ட செய்தியாக இருந்தாலும், அத்துடன் ஒரு நல்ல செய்தியும் உண்டு. நாம் எல்லோரும் மன்னிப்பு பெறவும், தேவனோடு சரியான உறவுக்குள் வரவும் முடியும்.

> நாம் எல்லோரும் பாவம் செய்து தேவன் நமக்கு தருகிற கனத்திற்கும் மகிமைக்கும் அபாத்திரராக காணப்படுகிறோம்.
>
> எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.
>
> — ரோமர் 3:23-24

இயேசு உங்கள் பாவத்திற்கான கிரயத்தைச் செலுத்திவிட்டார்; நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அதை நம்பவும், ஏற்றுக் கொள்ளவும் வேண்டியதுதான். நீங்கள் உங்கள் பாவங்களை ஒப்புக்

கொள்வீர்களானால் அவைகளுக்காக மனம் வருந்தி, அவைகளை விட்டு முற்றிலும் திரும்பி விட வாஞ்சியுங்கள். தேவன் உங்களை மன்னித்து உங்களை ஒரு புதிய நபராக மாற்றுவார்.

> நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். —1 யோவான் 1:9

தேவன் ஏதாவது செய்ய வேண்டுமே என்று காத்திருக்க வேண்டியதில்லை. அவர் செய்ய வேண்டியதை ஏற்கனவே செய்து முடித்து விட்டார். நம்முடைய தவறான கிரியைகள் எல்லாம் மன்னிக்கப்படும்படியாக ஒரு பரிபூரணமான, குற்றமற்ற பலி செலுத்தப்பட வேண்டியிருந்ததால் தேவன்தாமே தம்முடைய ஒரே பேரான குமாரனை நம்முடைய ஸ்தானத்திலே மரிக்கும்படி கொடுத்தார். இவ்விதமாக நீதி நிறைவேற்றப்பட்டு விட்டபடியால் நாம் எந்தத் தடையும் இல்லாமல் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் மூலமாக தேவனோடு கூட ஆழமான நெருக்கமான உறவுக்குள் வர முடியும். நாம் நம்முடைய சொந்தத் தகுதியால் தேவனண்டை கிட்டி வர முடியாது. நமக்காகப் பரிந்துரைக்க ஒருவர் தேவை. நமக்கும் தேவனுக்கும் இடையில் செல்வதற்கு ஒருவர் தேவை. அவர்தான் இயேசு. பாவத்தினிமித்தம் உண்டான பிளவை நீக்கி சரி செய்வதற்கு, இயேசு நடுவில் நின்று, அப்பிளவை சரி செய்து நம்மை தேவனண்டைக் கிட்டி சேர்ந்தார்.

ஒரு குழந்தைக்குள் எப்படி அதின் தந்தை இருக்கிறாரோ (அவரின் இரத்தம், அவரின் DNA, குரோமோசோம் போன்றவை), அப்படியே

தேவனும் கிறிஸ்துவுக்குள்ளாக இருந்து உலக மக்களை தம்முடன் மீண்டும் ஒப்புரவாக்குகிறார். தேவன் தாம் படைத்த மக்களை நேசிக்கிறார். வெளியே வர ஒரு வழி இல்லாமல், பாவத்தின் அடிமைத்தனத்திற்கு விற்கப்பட்டவர்களாக அவர்களைக்காண தேவன் விரும்பவில்லை. இயேசுவே ஒரே வழியாக இருக்கிறார்.

## பாவம் சாபத்தைக் கொண்டு வருகிறது

தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது: உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் (எண்ணாகமம் 32:23). பாவமானது சாபத்தைக் கொண்டு வருகிறது; கீழ்ப்படிதலோ ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது. (உபாகமம் 28). ஒரு நபர் பாவஞ்செய்து கொண்டே நலமாக வாழ்வது போல் கொஞ்சக்காலம் தோன்றலாம். அவர்கள் வாழ்க்கை மற்ற நல்மக்களின் வாழ்க்கை போல காணப்பட்டாலும், முடிவில் அவர்கள் தெரிந்தெடுத்த தவறுகளின் விளைவுகள் நிச்சயமாய் வெளிப்படும்.

தேவனுக்குக் கீழ்ப்படிகிற வாழ்வுக்குப் பதிலாக, ஒரு பாவகரமான வாழ்க்கையை நாம் தெரிந்தெடுத்தால், நம் ஆத்துமாவில் துயரம் உண்டாகும். மாம்சமும் எலும்பும் கொண்ட ஒரு சரீரத்தை என்பதை விட மனிதன் மேலானவன். மனிதன் ஒரு ஆவிக்குரிய ஜீவியாகவும், மனம், சித்தம், உணர்வு இவையடங்கிய ஆத்துமா உடையவனாகவும் உள்ளான். மனிதனின் ஆள்தத்துவம் இப்படியாக இருக்கிறது. பாவிகள் தங்கள் மனதில் துன்பப்படுகிறார்கள். அவர்கள் எதைச் செய்து கொண்டிருந்தாலும், எதை உடையவர்களாக இருந்தாலும் ஒன்றும் அவர்களுக்கு திருப்தி தருவதில்லை. மன வேதனை அவர்களை நிரப்புகிறது. உணர்வு ரீதியாக அவர்கள் துன்பப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே நடத்திச் செல்லத்

தீர்மானித்திருக்கிறபடியால், காரியங்கள் அவர்கள் நினைக்கிற பிரகாரமாக நடவாதபோது குழப்பமும், கோபமும் அடைகிறார்கள். விசுவாசத்தின் வழியை அறியாமலிருக்கிறார்கள். தங்களை விட மேலான வல்லமையாகத் திகழுகிற தேவனை நம்புவது அவர்களால் கிரகிக்கக்கூடாததாக உள்ளது. அவர்கள் ஆத்துமாக்களில் இளைப்பாறுதல் இல்லை. ஏனெனில் தேவனை விசுவாசிப்பதின் மூலமாகவே அவர் தரும் இளைப்பாறுதலில் பிரவேசிக்க முடியும். (எபிரெயர் 4:3)

ஆம், பாவகரமான வாழ்க்கை சாபம் நிறைந்ததே. அதினின்று எந்த நன்மையும் வர முடியாது. தேவனின்றி வாழ முயற்சிக்கும் ஒருவருக்கு என்ன நேரிடும் என்பதைப் பற்றி தேவன் இவ்விதமாக கூறுகிறார்:

> மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப்போல நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன்; அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப் போல் கிடக்கும்.
>
> கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும், அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது, அவருடைய எரிச்சலின் அக்கினியால் தேசமெல்லாம் அழியும், தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்.
>
> — செப்பனியா 1:17-18

இந்த தேவ வார்த்தைகள் அச்சுறுத்துவதாக இருந்தாலும் இயேசு கிறிஸ்துவை நம்புகிற ஒருவரின் உள்ளத்தில் எந்த பயமும் உண்டாகத்

தேவையில்லை. இயேசுவை நம்புகிறவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கோ, ஆக்கினைத் தீர்ப்புக்கோ உள்ளாவதில்லை. (யோவான் 3:18)

## குற்ற உணர்வும் ஆக்கினைத் தீர்ப்பும்

குற்ற உணர்வானது பாவியின் நிரந்தரக் கூட்டாளி. அந்தக் குற்ற உணர்வை உதாசினப்படுத்த பலவித காரியங்களை ஒருவர் செய்து கொண்டிருந்தாலும், அவரின் வாழ்க்கை சரியான நிலையில் இல்லை என்பதை உள்ளத்தின் ஆழத்தில் அறிவார். பாவிகள் குற்ற உணர்வினின்று தப்ப முடியாது என்று இயேசு சொல்லியிருக்கிறார் (யோவான் 9:41).

வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாடு நாம் அறிந்தபடியே "பழையது." இயேசு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தும்காலம் வரைக்கும் தேவன் மக்களின் பாவங்களை மூடுவதற்காக பயன்படுத்தியதுதான் பழைய உடன்படிக்கை. அதில் பாவங்களுக்காக பலி செலுத்தும் ஒரு முறைமையின் மூலமாக, ஜனங்களுடைய பாவங்கள் மூடப்பட்டதே ஒழிய நீக்கப்படவில்லை. குற்ற உணர்வு இருந்து கொண்டே வந்தது. ஆயினும் இந்தப் புதிய ஏற்பாட்டில் புதிய உடன்படிக்கையின் கீழ் பாவத்தை மூடுவதற்கல்ல. அதை முழுமையுமாக நீக்குவதற்கு நமக்கு ஒரு பூரணமானதும், இறுதியானதுமான பலி செலுத்தப்பட்டாயிற்று. இது பாவத்தை கழுவுவதோடு மட்டும் அல்ல, அந்த குற்ற உணர்வையும் அறவே நீக்கி விடுகிறது. கீழ்க்கண்ட வேத வசனங்களை நிதானமாய் வாசித்து அவைகளின் பொருளின் வல்லமையை தியானியுங்கள். இவைகள் எபிரெயர் 10-ம் அதிகாரத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

(அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய) இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் (தேவ)சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம். (பிரதிஷ்டை பண்ணப்பட்டு பிரித்தெடுக்கப் பட்டுள்ளோம்). — எபிரெயர் 10:10

இவரோ (கிறிஸ்து) பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து. — எபிரெயர் 10:12

அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து அவைகளை அவர்களுடைய மனதில் (அவர்களுடைய உள்ளான சிந்தனையில், புத்தியில்) எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்த பின்பு,

அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார். — எபிரெயர் 10:16-17

துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும் (உண்மையும், உத்தமுமான) சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் (நம் முழு ஆள்தத்துவத்துடன் தேவனை முழுமையாக நம்பி, அவரின் வல்லமையிலும், ஞானத்திலும், நற்குணத்திலும்

பற்றுறுதியுடன் அவரைச் சார்ந்து கொள்ளுதல்) பூரண நிச்சயத்தோடு சேரக்கடவோம். — எபிரெயர் 10:22

இந்த வேத வசனங்கள் பல முக்கியமான, அழகான காரியங்களை நமக்கு அறிவிக்கிறது. முதலாவது இயேசு நம் எல்லோருக்காகவும் ஒரே முறையாக பலியானார் என்றும், அவருடைய பலியுடன் கூடச் சேர்க்கப்பட வேண்டியதாக ஒன்றுமில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது. பழைய உடன்படிக்கையின் கீழ் பலிகள் மீண்டும் மீண்டும் செலுத்தப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். ஆயினும் அது குற்ற உணர்வை நீக்காது. எக்காலத்துக்குமாக இயேசு நமக்காக ஒரே பலியானார். அந்த பலி நம் பாவத்தையும் குற்ற உணர்வையும் நீக்கி விடுகிறது.

இந்த குற்ற உணர்வானது விதிமுறைப்படி நீக்கப்பட்டாயிற்று. ஆனாலும் குற்ற உணர்வின் நினைவுகளிலிருந்து எப்படி விடுதலையுடன் வாழ்வது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். உண்மையில், கிறிஸ்துவுக்காக வாழும் புது வாழ்வு என்பது ஒருவரின் உணர்வுகளின் மறு பக்கத்தை அறிந்து அதன்படி வாழக் கற்றுக் கொள்ளுதலாகும். உணர்ச்சிகள் தங்கள் மீது ஆளுகை செய்ய ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. நம் உணர்ச்சிகள் எப்படி இருந்தாலும், தேவ வசனத்தைக் கற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்படிந்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட கீழ்ப்படிதலின் வாழ்க்கை முறை ஒப்பிட முடியாத ஆசீர்வாதங்களை நமக்குக் கொண்டு வருகிறது.

அத்தியாயம் 3

# இது அர்ப்பணத்தின் நேரம்

நீங்கள் ஏற்கனவே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவுடன் உங்கள் புது வாழ்வைத் துவங்குவதற்கு உதவும்படிக்கு இப்புத்தகத்தை கேட்டுப் பெற்றிருக்கலாம். அல்லது இப்புத்தகம் உங்களுக்கு கொடுக்கப்பட்டு, நீங்கள் அந்தத் தீர்மானத்தை எடுக்கக்கூடிய தருணத்தில் இருக்கலாம்.

யோவான் 3:16 சொல்லுகிறது; ‘‘தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.’’

இந்த வசனத்தின் வல்லமையை நீங்கள் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவும்படி ஒரு கதையைச் சொல்கிறேன்.

சிக்காகோ பட்டணத்தில் குளிர்காலத்தில் ஒரு இரவில், ஒரு பனிச் சூறாவளி அப்பகுதியை ஆட்கொள்ளும் நேரமாக இருந்தது. அங்கு மூலையில் ஒரு சிறுவன் செய்தித்தாள்களை விற்றுக் கொண்டிருந்தான். மக்கள் குளிருக்குப் பயந்து, தங்கள் வீடுகளுக்குள்ளேயே இருந்தபடியால், அச்சிறுவனால் தன் வேலையைச் செய்ய முடியாதவனாக குளிரில் கஷ்டப்பட்டுக்

கொண்டிருந்தான். அவன் ஒரு காவலரிடம் சென்று, "ஐயா, இந்த ஒரு ஏழைப் பையன் இந்த இரவுத் தங்கிக் கழிப்பதற்கு ஏற்ற ஒரு இதமான இடத்தை நீங்கள் தயவாய் எனக்கு காண்பித்து உதவ முடியுமா? நான் பொதுவாக இந்த தெருவின் அந்த மூலையில் உள்ள ஒரு பெட்டியில் தூங்குவது வழக்கம். ஆனால் இன்று கடுங்குளிராக உள்ளதே. எனக்குத் தங்குவதற்கு வேறொரு நல்ல இடம் கிடைத்தால் நலமாயிருக்கும்" என்று கேட்டான்.

அந்தக் காவலர் அச்சிறுவனை நோக்கிப் பார்த்து "சரி, நீ என்ன செய்ய வேண்டுமென்று நான் உனக்குச் சொல்கிறேன், தொடர்ந்து இந்தத் தெருவிலேயே நேராக நடந்து செல்வாயானால் ஒரு பெரிய வெள்ளை நிற வீடு வரும். அந்த வீட்டின் கதவைத் தட்டு. அவ்வீட்டார் கதவைத் திறந்தவுடன், "யோவான் 3:16" என்று மட்டும் சொல், அவர்கள் உன்னை வீட்டுக்குள் ஏற்றுக் கொள்வர்" என்று சொன்னார்.

அச்சிறுவன் அப்படியே செய்தான். அவன் அந்த வீட்டின் கதவண்டை சென்று தட்டியபோது, அங்கே ஒரு ஸ்திரீ வந்து கதவைத் திறந்தாள். அவன் அந்த ஸ்திரீயை நோக்கிப் பார்த்து "யோவான் 3:16" என்று சொன்னான்.

அந்த ஸ்திரீ "உள்ளே வாருங்கள்" என்று சொன்னாள்.

அவள் அச்சிறுவனை அழைத்து தீக்கனல் நிறைந்த ஒரு சூளை போன்ற இடத்தின் அருகே சுகமாக அமரச்செய்திட்டாள். அவள் அங்கே சிறிது நேரம் அமர்ந்து சிறிது நேரம் யோசித்து, *யோவான் 3:16 எனக்கு இது புரியவில்லை - ஆனால் ஒன்று நிச்சயம். குளிரில் நடுங்குகிற சிறுவனை இது இதமாக்குகிறது* என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டான்.

பின்னர் அந்த ஸ்திரீ அவனிடத்திற்கு வந்து, "நீ பசியாயிருக்கிறாயா? என்று கேட்டாள்."

அவன் பதிலுரைத்து, "ஆம், கொஞ்சம் பசியாகத்தான் இருக்கிறேன். இரண்டு நாட்களாக ஒன்றும் சாப்பிடவில்லை. சிறிது உணவு கிடைத்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன்," என்றான். அந்த ஸ்திரீ அவனை சமையல் அறைக்கு கூட்டிச் சென்று சிறந்த உணவு பதார்த்தங்கள் நிறைந்த மேஜையின் அருகே அமரச் செய்தாள். அவன் சாப்பிட்டான், சாப்பிட்டான் இனி தன்னால் முடியாது என்னும் அளவுக்கு சாப்பிட்டான். பின்பு, *யோவான் 3:16 - எனக்கு இது புரியவில்லை - ஆனால் ஒன்று நிச்சயம் பசியாயிருக்கிற சிறுவனை இது நிரப்புகிறது* என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டான்.

அந்த ஸ்திரீ அவனை மாடிக்கு அழைத்துச் சென்று, குளிப்பதற்கேற்ற சற்றுச் சூடான தண்ணீர் நிறைந்த குளிக்கும் தொட்டியண்டை கொண்டு விட்டாள். அவன் அதில் மூழ்கி, *யோவான் 3:16 - எனக்கு இது புரியவில்லை - ஆனால் ஒன்று நிச்சயம், இது அழுக்கான ஒரு சிறுவனை கழுவி சுத்தமாக்குகிறது*. அந்த ஸ்திரீ மீண்டும் வந்து, சிறந்த மெத்தை விரிப்புகள் கொண்ட ஒரு துயிலறைக்கு அச்சிறுவனைக் கூட்டிச் சென்று அன்பின் முத்தம் கொடுத்து வாழ்த்தி அவனை உறங்கச் சொன்னாள். விளக்குகளையும் அணைத்து விட்டாள். அச்சிறுவன் அங்கே அந்த இருளில் படுத்துக் கொண்டே ஜன்னல் வழியாகப் பார்த்த போது அந்த குளிர் இரவில் பனி கடுமையாக இறங்குவதைக் காண முடிந்தது. அவன் அதைப் பார்த்தவனாக *யோவான் 3:16 எனக்கு இது புரியவில்ல - ஆனால் ஒன்று நிச்சயம் களைப்படைந்த ஒரு சிறுவனை இது இளைப்பாறப் பண்ணுகிறது* என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டான்.

அடுத்த நாள் காலை மீண்டும் அந்த ஸ்திரீ அவனை உணவு வகைகள் நிறைந்திருந்த அந்த மேஜைக்கு நடத்திச் சென்றாள். அவன் உண்டு முடித்தவுடன், அவன் குளிர் காய்வதற்காக கனல் நிறைந்த அந்த சூளை போன்ற இடத்திற்கு கூட்டிச் சென்று குளிர்காயும்படி செய்தாள். அவள் வேதாகமத்தை எடுத்து அவனருகே அமர்ந்து “யோவான் 3:16யை நீ புரிந்து கொள்கிறாயா?” என்று கேட்டாள்.

“இல்லை, அம்மா நான் புரிந்து கொள்ளவில்லை. நேற்றிரவு அந்த காவலர் இதைப் பயன்படுத்த சொல்லிய போது தான் முதல் முறையாக நான் இதைக்குறித்துக் கேள்விப்பட்டேன்.” என பதிலுரைத்தான். அவள் தன் வேதாகமத்தைத் திறந்து, யோவான் 3:16லிருந்து இயேசுவைப்பற்றி அவனுக்கு விளக்கினாள். அந்த குளிர்காயும் இடத்தில் வைத்துதானே அவன் தன் இருதயத்தையும், வாழ்க்கையும் இயேசுவுக்குக் கொடுத்தான். அவன் அங்கே அமர்ந்து கொண்டே *யோவான் 3:16 - எனக்கு இது புரியவில்லை- ஆனால் ஒன்று நிச்சயம் - ஒரு காணாமற்போன சிறுவனைக் கண்டெடுத்து பாதுகாப்பளிக்கிறது.* (அறியப்படாத ஆசிரியர்)

இப்போது, உங்கள் பாவத்திற்கான ஒரே தக்க பரிகாரமாக தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் ஏற்றுக் கொண்டு உங்கள் வாழ்வை தேவனிடம் ஒப்படைக்க ஆயத்தமாயிருப்பீர்களானால், இந்த ஜெபத்தை என்னோடு சேர்ந்து ஜெபிக்கும்படி உங்களை அழைக்கிறேன். இந்த வார்த்தைகளை சத்தமாகச் சொல்லி, அவைகள் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் அர்த்தமுள்ளதாக இருக்கும்படி ஒவ்வொரு வார்த்தையையும் கவனியுங்கள்.

பிதாவாகிய தேவனே, நான் உம்மை நேசிக்கிறேன். நீர் என் பாவங்களை மன்னிக்கும்படி நான் இன்று உம்மண்டை விசுவாசத்தால் வருகிறேன். இயேசுவே, நான் உம்மை நம்புகிறேன். நீர் என் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தீர் என்றும், உம்முடைய குற்றமற்ற இரத்தத்தை எனக்காக சிந்தினீர் என்றும், நீர் என் ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டு,எனக்கு வரவேண்டிய தண்டனையை நீர் ஏற்றுக் கொண்டீர் என்றும் நம்புகிறேன். நீர் மரித்தீர். அடக்கம்பண்ணப்பட்டீர். மூன்றாம் நாள் மரித்தோரினின்று உயிரோடு எழுந்தீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். மரணம் உம்மை பிடித்து வைத்திருக்க முடியவில்லை. நீர் சாத்தானை மேற்கொண்டு, பாதாளம், மரணம் இவற்றின் திறவுகோல்களை அவனிடத்தினின்று கைப்பற்றினீர். நீர் என்னை நேசித்ததினிமித்தம் இவைகளையெல்லாம் செய்தீர் என நான் நம்புகிறேன். நான் ஒரு கிறிஸ்துவை உடையவனாக மாற விரும்புகிறேன். என் வாழ்நாளெல்லாம் நான் உம்மையே சேவிக்க விரும்புகிறேன். நீர் எனக்கு வாக்குப் பண்ணியுள்ள புதிய வாழ்வை எப்படி வாழ்வது என கற்றுக் கொள்ள விரும்புகிறேன். இயேசுவே, இப்பொழுது நான் உம்மை ஏற்றுக் கொண்டு என்னையே உமக்கு கொடுக்கிறேன். நான் இருக்கிறவண்ணமாக என்னை ஏற்றுக் கொண்டு, நான் எப்படிப்பட்டவனாக இருக்க நீர் விரும்புகிறீரோ அப்படி என்னை மாற்றும்.

*இயேசுவே, நீர் என்னை இரட்சித்ததற்காக உமக்கு நன்றி. உம்முடைய பரிசுத்த ஆவியால் என்னை நிரப்பி நான் அறிய வேண்டிய ஒவ்வொன்றையும் எனக்கு கற்றுத் தாரும். நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்றும், நான் மறுபடியும் பிறந்திருக்கிறேன் என்றும், நான் மரிக்கும் போது பரலோகத்துக்குச் செல்வேன் என்றும், நான் இப்பொழுது நம்புகிறேன். பிதாவாகிய*

*தேவனே, என் வாழ்வின் பயணத்தை இனிதாக்கி, உம்முடைய மகிமைக்காக வாழ்வேன்!*

இந்த ஜெபத்தை உண்மையாக ஜெபித்திருப்பீரானால், உங்கள் வாழ்வின் மிக முக்கியதீர்மானத்தை எடுத்து விட்டீர்கள். உங்கள் உணர்வு எப்படி இருக்கிறது என்பது பொருட்டல்ல - தேவன் உங்கள் ஜெபத்தைக் கேட்டு, அதற்கு பதிலளித்திருக்கிறார். சமாதானமோ, அல்லது சந்தோஷமோ, இளைப்பாறுதலோ அல்லது விடுதலையோ உங்கள் உணர்வுகள் எப்படியும் இருக்கலாம் அல்லது எவ்விதமான உணர்வும் இல்லாமலிருக்கலாம். உங்கள் உணர்வுகள் உங்கள் வாழ்வைக் கட்டுப்படுத்த இடம் கொடுக்காதீர். தேவனுடைய வார்த்தையை நம்புங்கள். ஏனெனில் அவர் உண்மையுள்ளவராகவும், தம்முடைய வாக்குத்தத்தங்களைக் காத்துக் கொள்ளுகிறவராகவும் இருக்கிறார். அவர் சொல்கிறதாவது:

> பிதாவானவர் எனக்கு கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை (என்னிடத்திற்கு வருகிற ஒருவரையும் நான் ஒருபோதும், ஒருக்காலும் புறக்கணிப்பதில்லை). — யோவான் 6:37

உலகத்தின் முடிவு மட்டும் தேவன் எக்காலமும் உங்களோடு இருப்பதாக வாக்குப்பண்ணியுள்ளார். நீங்கள் அவரை எப்போதுமே உணர முடியாமல் இருக்கலாம். ஆனால் அவர் எப்போதும், எங்கும் நிறைந்திருக்கிறார். அவர் எப்போதும் உங்களை கண்ணோக்கி, கரிசனையுடன் உங்களை கவனித்து வருகிறார். உங்கள் வாழ்வை பாதிக்கிற அனைத்து காரியங்களைக் குறித்தும் அவர் அக்கறை கொண்டவராய், அனைத்தையும் சீர்படுத்த வாக்குப்

பண்ணியிருக்கிறார். அவர் உங்களுக்குள் ஓர் நற்கிரியை துவக்கியுள்ளார். அவர் தாமே அதை நிறைவாக்கி பரிபூரணப்படுத்துவார் (ஆதியாகமம் 28:15, சங்கீதம் 138:8, பிலிப்பியர் 1:6)

பாராட்டுக்கள்! உங்களுக்கு இப்பொழுது மிகச் சிறந்த நண்பர் ஒருவர் இருக்கிறார் - இயேசு - உங்கள் வாழ்வின் மிகச் சிறந்த நண்பர் இவரே. அவர் எப்பொழுதும் உங்களை புரிந்து கொள்கிறவராக இருக்கிறார். நீங்கள் எப்பொழுதும் எதைப்பற்றியும் அவரிடம் பேசலாம் (எபிரெயர் 4:15). அவர் உங்களைப் புறக்கணிப்பதோ, ஆக்கினைத் தீர்ப்புக் குட்படுத்துவதோ இல்லை. தேவனைப் பொருத்தளவில் எந்தக் காரியமும் சந்திக்கப்படாத முடியாத அளவுக்கு பெரிதும் இல்லை, சிறிதும் இல்லை. நீங்கள் உங்கள் வழிகளிலெல்லாம் அவரை நினைத்து, உங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அவரை இனிதே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றே அவர் விரும்புகிறார்.

நீங்கள் ஒரு புது சிருஷ்டியாக இருக்கிறீர்கள். பழையவைகள் ஒழிந்து போயின; எல்லாம் முற்றிலும் புதிதாயின (2 கொரிந்தியர் 5:17). உங்கள் வாழ்வு புதிதாய்த் துவங்குகிறது.

நீங்கள் தவறிழைப்பீர்கள் – நாம் எல்லோரும் அப்படிச் செய்கிறோம். நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய காரியம் ஏராளம். வாழ்நாள் பரியந்தம் நீடித்திருக்கும் ஒரு பயணத்தை இப்பொழுது துவங்கியுள்ளீர்கள். எப்பொழுதெல்லாம் தவறு செய்கிறீர்களோ, அப்பொழுதெல்லாம் தேவனுடைய மன்னிப்பும், சுத்திகரிப்பும் கேட்கிற அனைவருக்கும் கிடைக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எந்தப் பாவமாக இருந்தாலும் உடனே மனந்திரும்பி விடுங்கள். அவர்

எப்படியும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறபடியால் அவரினின்று ஒன்றையும் ஒருக்காலும் மறைக்க முயற்சிக்காதீர்கள்.

தேவன் உங்களை மிகவும் நேசிக்கிறார். அவர் உங்களை எப்பொழுதும் நேசிக்கிறார். நீங்கள் நன்றாக நடந்து கொள்ளும்போது உங்களை அதிகமாக நேசிப்பவராகவும், நீங்கள் தவறாக நடந்து கொள்ளும் போது குறைவாக நேசிப்பவராகவும் அவரில்லை. அவர் உங்களை எப்பொழுதும் நேசிக்கிறார்!

இப்பொழுது ஒரு புதிய வாழ்க்கைப் பாதையைக் கற்றுக் கொள்ளும் நேரமாக உள்ளது.

அத்தியாயம் 4

# ஒரு புதிய ஜிவியத்தின் மார்க்கம்

தேவனாலும், தேவனோடும், தேவனுக்காகவும் வாழ்கின்ற உங்கள் புதிய வாழ்க்கைக்குள் நீங்கள் பிரவேசிக்கும் போது, அவரின் பல கொள்கைகள் இந்த உலக முறைமைகளுக்கும் வழிகளுக்கும் முற்றிலும் மாறுபட்டவையாக, தலைகீழாக இருப்பவையாகத் தோன்றும். உண்மையில், தேவனுடைய இராஜ்யம் சரியாகத்தான் நிற்கிறது. இந்த உலகம் தான் தலைகீழாகக் கிடக்கிறது. நாம் தேவனுடைய வழியில் காரியங்களைச் செய்து பழகாதவர்களானபடியால் முதலில் அவைகள் கடினமானவைகளாகவும், புரிவதற்கு இயலாதவைகள் போலவும் தோன்றும்.

## ஞானஸ்நானம்

இயேசு கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய விசுவாசி என்ற முறையில் நீங்கள் செய்ய வேண்டிய முதற்காரியங்களுள் ஒன்று தண்ணீரால் ஞானஸ்நானம் பெறுவதாகும். நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு எடுத்த, உள்ளான தீர்மானத்தின் வெளிப்படையான அடையாளம் ஞானஸ்நானம். ஒரு நபர் ஞானஸ்நான தண்ணீரின் அடியிற் செல்லும்

போது, அது பழைய வாழ்க்கையானது அடக்கம் பண்ணப்பட்டாயிற்று என்று அர்த்தப்படுத்துகிறது. அவர்கள் தண்ணீரினின்று வெளியே வரும் போது, அது உயிர்த்தெழுதலின் புதிய வாழ்க்கையைச் சுட்டிக் காட்டுகிறது. இக்காரியம் தேவனுக்கு கீழ்ப்படிதலாக நாம் செய்ய வேண்டியதாகும்.

> அதற்கு (அவர்கள் மீட்பின்) ஒப்பனையான ஞானஸ்நானமாவது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் (குளித்தல்), தேவனைப்பற்றும் நல் மனச் சாட்சியின் (உள்ளார்ந்த சுத்தமும் சமாதானமும்) உடன்படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் (உள்ளார்ந்த கேள்விகளினின்றும் பயங்களினின்றும்) இரட்சிக்கிறது. — 1 பேதுரு 3:21

> பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி (உங்கள் உள்ளான மனதில் தேவனுடைய சித்தத்தை புறக்கணியாமல் ஏற்றுக் கொள்ளும்படி உங்கள் நோக்கங்களையும், இலக்கையும் மாற்றிக் கொள்ள வேண்டும்), ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். — அப்போஸ்தலர் 2:38

## சபைக்குச் செல்லுதல்

நான் அதிகமாக சிபாரிசு செய்யும் மற்றொரு காரியம் என்னவென்றால் உள்ளூர் சபையாகிய குடும்பத்தில் பங்கு கொள்ளுதல் ஆகும். காரை நிறுத்தி வைத்திருக்குமிடத்தில் நான் உட்கார்ந்திருந்தாலும், நான்

காராகி விட முடியாதது போல, ஒருவர் ஆலயத்திற்குச் செல்லுவதால் கிறிஸ்தவராக முடியாது. சபைக்குப் போகிற காரியம் நம்மைக் கிறிஸ்தவர்களாக மாற்றாது. ஆயினும் நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால் தேவனை ஆராதிக்கவும், பிற விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளவும் வாஞ்சையுள்ளவர்களாக இருப்போம். சபையில் நாம் தேவனுடைய வார்த்தையையும் கற்றுக் கொள்ளலாம்.

எல்லா சபைகளும் நல்ல சபைகள் அல்ல. சில சபைகள் சமய சடங்காச்சாரங்களால் வெளிப்பிரகாரமாக நன்றாகத் தோன்றினாலும், அவைகளின் உள்ளே யாருக்கும் உதவும் வகையில் எதுவும் நன்மை நடப்பதாகத் தெரியவில்லை. தேவ வசனமாகிய ஆகாரத்தை கொடுக்காமல், தேவனோடுள்ள உங்கள் உறவில் வளர உங்களை உற்சாகப்படுத்தாத சபைக்கு நீங்கள் சென்று கொண்டிருந்தால் வேறொரு சபையை தேடிக் கொண்டே இருசீங்கள். மருத்துவர்களைப் போல சபைகளும் முழுமையாக நல்லவைகள் அல்ல; ஆனால் அவைகள் முற்றிலும் தவறானவை என்றும் சொல்ல முடியாது. சிலர் பெரிய சபைகளை விரும்புகிறார்கள். மற்ற சிலர் சிறு சபைகளை விரும்புகிறார்கள். சிலர் ஒரு குறிப்பிட்ட சபைப்பிரிவின் மீது மிகுந்த நாட்டம் கொண்டுள்ளனர். மேலும் சிலர் எந்தத் தனி பிரிவும் இன்றி பொதுவான சபைகளைத் தேடுகிறார்கள். இவர்கள் சபையாகிய ஸ்தாபனத்துடன் தங்களை இணைத்துக் கொள்ளுவதில்லை. இங்கே முக்கிய காரியம் என்னவென்றால் ஒரு திடமான சபையுடன் அர்ப்பணிப்போடு இருப்போமானால் அது நமக்கு உதவியாக இருக்கும். உங்களைப் போன்ற சிந்தையும் நம்பிக்கைகளும் கொண்ட பலரோடு நட்பு கொண்டு அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ள சபையானது வாய்ப்பளிப்பதோடு, ஒழுக்கத்தோடு வாழுகிற ஒரு கூட்ட மக்களோடு

நீங்கள் கலந்து கொள்வதின் மூலம் அநேக உலகப்பிரகாரமான சோதனைகளை தவிர்க்கவும் உதவுகிறது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக வளர்ச்சி அடைய உதவி செய்கிற ஒரு சபைக்குச் செல்ல வேண்டும். ஒரு விசுவாசி பல காரியங்களை கற்று தேர்வது மிக முக்கியம். அப்படி கற்று முன்னேறாவிட்டால் பின் வாங்கிப் போகிற பழைய வழிகளுக்கு திரும்புகிற அபாயம் நேரிடும்.

புதிய விசுவாசிகளுக்கு சிறு வேதாகம குழுக்கள் மிகவும் பயன் அளிப்பதாக அமையும். கற்றுக் கொள்ளவும் கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும், ஜெபங்களைப் பெற்றுக் கொள்ளவும் பிறருக்காக ஜெபிப்பதில் ஈடுபடவும் இவ்விதமான சிறு குழுக்கள் பெரும்பாலும் வாய்ப்பளிக்கும்.

ஒரு வேளை உங்கள் சபை பெரியவர்களுக்கான வேதாகம வகுப்புகளையோ அல்லது வீட்டுக் குழுக்களையோ நடத்தினால் நீங்களும் அதில் ஈடுபடலாம். சபை என்பது ஊழியத்தைப் பெற்றுக் கொள்கிற இடமாக மாத்திரமல்ல, கிறிஸ்துவின் சரீரமான சபைக்குள் நமக்கென்ன ஊழியம் இருக்கிறதென்றும் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்றும் கண்டு கொள்ளும் இடமாகவும் இருக்கிறது. மற்றவர்களிடத்தில் இருந்து பெற்றுக் கொள்வது மட்டும் அல்ல, நீங்களும் பிறருக்கு கொடுக்க வேண்டும்.

## அர்ப்பணம்

அர்ப்பணத்துடன் வாழ்வது மிக முக்கியம். ஏதோ ஒரு முறை ஒரு தவறை செய்வதால் நம்முடைய வாழ்க்கை சிக்கலாகி விடாது, மாறாக தொடர்ந்து தவறு செய்யும் போது அது சிக்கலாகி விடும். ஏதோ ஒன்று

அல்லது இரண்டு தடவை நன்மை செய்வது தேவன் நமக்கென்று வைத்திருக்கும் புதிய வாழ்க்கை வாழ்வதற்கு உதவாது. நாம் செய்ய வேண்டும் என்று அறிந்திருக்கிறவற்றை செய்யத் தோன்றாவிட்டாலும், விடா முயற்சியுடன் அவைகளை நாம் செய்தாக வேண்டும். நாம் சீராக தொடர்ந்து வாழ வேண்டும். தேவன் உங்களுக்கு சுயக்கட்டுப்பாடு ஒழுக்கமுமான ஆவியைத் தந்திருக்கிறார் (2 தீமோ 1:7) நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அதனை அப்பியாசித்து ஜீவிக்க வேண்டும்.

தேவனோடு நேரம் செலவிட அர்ப்பணம் உள்ளவர்களாய் இருங்கள். வேதாகமத்தையும் மேலும் அதை தெளிவாக விளங்கிக் கொள்ள உதவும் புத்தகங்களையும் வாசித்து படியுங்கள். கிறிஸ்தவ போதனைகள் அடங்கிய குறுந்தகடுகளை (CDs) கவனியுங்கள். நல்ல கிறிஸ்தவ தொலைக்காட்சி நிகழச்சிகளையும் பாருங்கள். நேரம் எடுத்து ஜெபம் செய்யுங்கள். நாள் முழுதும் ஜெப சிந்தையுடன் இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களைக் குறித்த அனைத்து காரியங்களிலும் தேவன் அக்கறை உள்ளவர் என்பதையும், ஜெபம் என்பது அவரோடு சாதாரணமாக பேசுவது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக வளரும் போது தேவனோடு கூட எப்படி பேசுவது என்பதை மாத்திரம் அல்ல, தேவனுடைய சத்தத்தை எப்படி கேட்டறிவது என்பதையும் கற்றுக் கொள்வீர்கள். தேவனோடு வாழ்கிற உங்கள் வாழ்க்கையில் இது ஒரு பரவசமூட்டும் பரிமாணத்தைக் கூட்டும்.

அர்ப்பணம் தேவைப்படுகிற மற்றொரு பகுதி கொடுத்தல். தேவன் நமக்கு ஏராளமாக கொடுத்திருக்கிற படியால் அவருக்கும் பூமியின் மீது நடக்கும் அவர் பணிக்கும் நாம் கொடுக்க விரும்புவது இயற்கை.

உங்களுக்கு உதவி செய்யப்பட்டிருக்கும் பொழுது நீங்கள் பிறருக்கு இயற்கையாகவே உதவி செய்ய விரும்புவீர்கள். உங்கள் சபைக்கும், உங்கள் விசுவாச வாழ்வில் உங்களுக்கு உதவி செய்கிற ஊழியங்களுக்கு கொடுப்பதற்கு உங்களை அர்ப்பணிப்பின் மூலமாக நீங்கள் இதை செய்யலாம். நாம் தேவனுக்குக் கொடுக்கின்ற ஒவ்வொன்றையும் அவர் பல மடங்கு திருப்பித்தருகிறார். நாம் விதைக்கிறதை நாம் அறுப்போம் என்று அவருடைய வார்த்தை சொல்லுகிறது. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவரில் புது சிருஷ்டியாக மாறுவதற்கு முன் கொடுப்பதில் நமக்கு உண்மையான ஆர்வம் இல்லாதிருந்தது. நாம் சுயத்தை விரும்புகிறவர்களாகவும் மற்றவர்கள் நமக்கு கொடுக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறவர்களாகவும் இருந்தோம். ஆனால் இயேசுவோடு ஆழமான அன்பிற்குள் நாம் வரும் போது நம்முடைய இருதயத்தின் தன்மை மாறுகிறது.

## பரிசுத்தாவியின் நிறைவைப் பெறுதல்

ஞானஸ்நானம் பெறுவது என்பது முற்றிலும் மூழ்கி விடுவதை குறிக்கிறது. மூழ்கடிக்கப்படுகிற எந்த ஒரு பொருளுக்கும் ஒரு துவாரம் இருக்குமானால் அப்பொருள் முழுமையாக நிரப்பப்படும். நீங்களும் திறந்திருந்தால் பரிசுத்தாவியினால் முழுமையாக நிரப்பப்படுவீர்கள். நீங்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட பொழுது பரிசுத்தாவியைப் பெற்றுக் கொண்டீர்கள். ஆனால் உங்கள் இருதயத்தின் ஒவ்வொரு அறையையும் திறந்து கொடுத்து அவர் நிரப்பும்படிக்கு விட்டுக் கொடுக்காமல் இருந்திருக்கலாம்.

உங்களிடத்தில் பரிசுத்தாவியானவர் இருக்கிறார். ஆனால் அவர் உங்களை முழுமையாக நிரப்ப வேண்டும் என்று நீங்கள் விரும்ப வேண்டும். தேவன் தம்முடைய பணியில் உங்களை பயன்படுத்த விரும்புகிறார், அப்பணியில் நீங்கள் வெற்றிகரமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் திகழ்வதற்கு அவருடைய ஆவியின் வல்லமை உங்களுக்கு தேவை.

நம்முடைய அன்றாட வாழ்வில் நமக்கு உதவும் பொருட்டு தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களையும் நமக்குத் தருகிறார் (இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலை பொழிந்திருக்கிறார்). பல்வேறு வரங்கள் உண்டு. ஒவ்வொருவரும் அவற்றைப் பெற்றுக் கொள்கிறார்கள். அவற்றில் சில மற்றவைகளை விட மேலோங்கியதாக காணப்படும். நான் போதிக்கும்வரத்தை பெற்றுள்ளேன். மற்றவர்கள் இசையிலோ, நிர்வாகத்திலோ, இரக்கம் செய்வதிலோ, உதவுவதிலோ வரம் பெற்றிருக்கலாம். 1 கொரி. 12:7-10-த்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஒன்பது வரங்களைக் குறித்து நாம் அறிந்திருக்க வேண்டும். நாம் அவைகளைத் தீவிரமாய் வாஞ்சிக்கும்படி போதிக்கப்பட்டுள்ளோம். ஞானத்தைப் போதிக்கும் வரமும், அறிவை உணர்த்தும் வரமும், விசுவாச வரமும், குணமாக்கும் வரங்களும், அற்புதங்களைச் செய்யும் சக்தியும், தீர்க்கதரிசனம் உரைக்கும் வரமும் (தெய்வீக சித்தத்தையும் தேவனின் நோக்கத்தையும் விளக்கிச் சொல்வது), ஆவிகளை பகுத்தறியும் வரமும், பற்பல பாஷைகளை பேசும் வரமும், அந்தப் பாஷைகளை வியக்கியானம் பண்ணும் வரமும் ஆகிய இவைகளாகும்.

நீங்கள் இந்த வரங்களை எல்லாம் புரிந்து கொள்ளாமல் இருந்தாலும் தேவன் உங்களுக்கு இவைகளைத் தரும்படி அவைகளைப் பற்றியும் அவைகளின் சரியான பயன்பாட்டினைப் பற்றியும் உங்களுக்கு கற்றுக்

கொடுக்கும்படியும் அவரிடம் கேளுங்கள். தேவனுடைய வார்த்தையில் பல இடங்களில் மக்கள் அறியப்படாத பாஷைகளில் (ஒரு ஆவிக்குரிய மொழி) பேசினதாகப் பார்க்கிறோம்.நாம் அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும் பொழுது தேவனோடு இரகசியங்களைப் பேசி நாம் பக்திவிருத்தி அடைந்து, முன்நோக்கிச் செல்லுகிறோம். ஒவ்வொருவரும் அந்நிய பாஷையில் பேச வேண்டும் என்றுதான் விரும்புவதாக பவுல் கூறுகிறார். (1 கொரி. 14:2, 4-5)

குறிப்பாக அந்நிய பாஷையாகிய வரம் பல ஆண்டுகளாக கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு பிரிவினை உண்டாக்கும் காரியமாக இருந்து வருகிறது. சிலர் அவ்வரங்கள் இந்நாட்களுக்கு உரியவை என்றும் மற்றவர்கள் இந்நாட்களுக்குரியவை அல்ல என்றும் நம்புகிறார்கள். என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நான் இந்த வரங்களை அனுபவித்து, கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அந்நிய பாஷைகளை பேசுகிறேன். ஆகையால் இன்றைய கிறிஸ்தவருக்கு அவைகள் பொருத்தமானவை என்று அறிந்திருக்கிறேன். நமக்கு உதவும் எதுவும் நமக்கு தேவை.

மக்கள் தாங்கள் அனுபவிக்காததை அல்லது தாங்கள் புரிந்து கொள்ளாததை ஏற்றுக் கொள்ள பெரும்பாலும் மறுக்கிறார்கள். இது தவறு. வேதத்தை வாசித்து அது சொல்வதை நாம் நம்ப வேண்டும்.

பரிசுத்தாவியானவர் தரும் வரங்களில் அல்ல, அவர் மீதே நம் கவனம் இருக்க வேண்டும் என்று நான் உங்களை எச்சரிக்கிறேன். அந்நிய பாஷைகளையும் மற்ற வரங்களையும் சிலர் கொஞ்சம் மித மிஞ்சிய அளவில் பயன்படுத்துகிறார்கள்.

நாள்தோறும் அவருடைய பிரசன்னம் உங்களை அதிகமாக

நிரப்பும்படி கேளுங்கள். அப்பொழுது அந்நிய பாஷைகளும் மற்ற வரங்களும் சரியான நேரத்தில் உங்களுக்கு கிடைக்கும்.

## தேவன் தருபவற்றை அல்ல அவருடைய பிரசன்னத்தையே தேடுங்கள்

தேவன் உங்களுக்கு நன்மைகளைத் தர விரும்புகிறார். அவர் உங்களுக்கு அநேக ஆசீர்வாதங்களை அளிக்க வாஞ்சிக்கிறார். ஆனால் அவர் நமக்கு என்ன செய்ய முடியும் என்பதற்காக அவரைத் தேடுவதை விட அவர் யாராக இருக்கிறார் என்பதற்காக நாம் அவரைத் தேடுவது முக்கியம்.தேவன் ஒப்பிடப்பட முடியாத அளவு மிகவும் ஆச்சரியமானவர். அவருடைய பிரசன்னத்திலிருப்பது என்பது மிகவும் அற்புதமானது. அவருடைய முகத்தை நீங்கள் தேடும் போது அவருடைய கரம் எப்பொழுதும் உங்களுக்கு திறந்தே இருக்கிறது என்று கண்டு கொள்வீர்கள். நீங்கள் அவருடைய கரத்தை மாத்திரம் தேடுவீர்களானால் அது அவரை கனவீனப்படுத்துவதாகும். யாரும், தேவன் கூட, ஒவ்வெருவரையும் சுய நலமான நன்மைக்காக பயன்படுத்தப்படுவதை விரும்ப மாட்டார்கள்.

நீங்கள் விரும்புகிற அல்லது தேவைப்படுகிற எதையும் தருவதாக இருந்தால் அவருடைய நேரத்தில் அவர் அதை உங்களுக்குத் தருவார். ஆனால் மற்றெல்லாவற்றையும் விட அவரே உங்களுடைய வாழ்வில் அதிகமாக உங்களுக்கு தேவை என்பதை எப்பொழுதும் நினைவிற்கொள்ளுங்கள். அவருடைய அதிகமான பிரசன்னம், அவருடைய வழிகள் அவருடைய குணம், அவருடைய ஞானம், அவருடைய அறிவு, அவருடைய வல்லமை...

தேவன் எல்லாற்றிற்கும் எல்லாமாக இருக்கிறார். அவரின்றி நாம் ஒன்றுமில்லை. இயேசு சொன்னார் “என்னை அல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது.” (யோவான் 15:5)

> சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது (சகலமும் அவரிலிருந்து உண்டாகி அவரிலிருந்து வருகிறது; சகலமும் அவர் மூலமாய் வாழுகிறது. சகலமும் அவரில் மையம் கொண்டு அவரில் நிறைவு பெற்றும், அவரில் முடிவடைவதாகவும் உள்ளது). அவருக்கே என்றைக்கும் மகிமை உண்டாவதாக! ஆமென் (அப்படியே ஆகக்கடவது).
>
> — ரோமர் 11:36

## கற்றுக் கொள்ள வேண்டியவை ஏராளம்

நீங்கள் கற்று அறிந்துகொள்ள வேண்டிய எல்லாவற்றையும் நான் இந்த சிறு புத்தகத்தில் உங்களோடு பகிர்ந்து கொள்ள முடியாது. உங்கள் விசுவாசத்திற்கு அடிப்படையாக உள்ள உபதேச அம்சங்களையும், கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும் நீங்கள் கற்றறிந்து கொள்ள வேண்டும். பெரும்பாலான சபைகளில் புதிய விசுவாசிகளுக்காக வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நீங்கள் அவற்றுள் ஒன்றில் கலந்து கொள்ளும்படி உங்களை அறிவுறுத்துகிறேன். இயேசு ஒரு கன்னியிடத்தில் பிறந்தார் என்று நீங்கள் கற்றுக் கொள்வீர்கள். அது அசாத்தியமாக தோன்றினாலும் அது உண்மை, அதை ஏன் நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது முக்கியம். சுவிசேஷத்தை அறியாத மக்கள் அதை அறிந்து கொள்ளும்படி அவர்களுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட பணம் கொடுத்து அப்பணியைத் தாங்குவதின் முக்கியத்துவத்தை கற்றுக் கொள்வீர்கள். பிதா குமாரன் பரிசுத்த

ஆவியாகிய திரித்துவத்தில் தம்மை வெளிப்படுத்துகிற ஒரே தேவனை சேவிப்பதின் உண்மையை கற்றுக் கொள்வீர்கள். தூதர்களின் ஊழியம் இயேசுவின் இரத்தத்தின் முக்கியத்துவம், தேவனின் சத்தத்தை கேட்டுணருதல், நீதி, மனம் திரும்புவதற்கடுத்த உபதேசம் மற்றும் அநேக காரியங்களை கற்றுக் கொள்வீர்கள்.

உங்களுக்கு தேவையான ஒவ்வொன்றையும் நான் இந்த புத்தகத்தில் பகிர்ந்து கொள்ள முடியாவிட்டாலும் உங்கள் புது வாழ்வுக்கு மிகவும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த சில காரியங்களை நான் தொடர்ந்து பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அத்தியாயம் 5

# ஒரு புதிய சிந்தையின் மார்க்கம்

முற்றிலும் ஒரு புதிய பாதையில் சிந்திக்கக் கற்றுக் கொள்வது மிகவும் முக்கியம். உங்களுக்கு தேவன் ஒரு நல்ல திட்டத்தையும், வாழ்வையும் வைத்திருக்கிறார்.ஆனால் நீங்கள் அதைக்குறித்து அவருடன் ஒரு உடன்பாட்டுக்குள் வரவேண்டும். சாத்தானும் உங்களுக்காகவும், உங்கள் வாழ்க்கைக்காகவும் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறான். அத்திட்டம் நல்லதல்ல. திருடன் (சாத்தான்) திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் (யோவான் 10:10). சாத்தான் எல்லா பொல்லாத தவறான சிந்தனைகளையும் நமக்குள் திணித்து, நாம் அவைகளை நம்பி அவனோடு ஒத்துப் போவோம் என்று எதிர்பார்க்கிறான். இப்படியாக அவன் மக்களை வஞ்சித்து, அவர்கள் வாழ்க்கைக்குள் பிரவேசிக்கப் பார்க்கிறான்.

> நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு (இக்காலத்திற்கு) (இதின் வெளிப்பிரகாரமான, மேலளாவிய முறைமைகளுக்கு ஏற்றாற்போல் மாறிக் கொண்டு), ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம்

இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் (அதின் புதிய கொள்கைகளின்படியும், தன்மையின்படியும்) (முற்றிலும்) புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (மாறுங்கள்)

— ரோமர் 12:2

மேலே கொடுக்கப்பட்டுள்ள வேத வசனம் நம்முடைய சிந்தை மாறினாலொழிய நம்முடைய வாழ்க்கை மாறாது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. உங்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை வேண்டுமென்றால், உங்களுக்கு ஒரு புதிய சிந்தையின் மார்க்கம் தேவை. தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார். ஆனால் நாம் சரியாக சிந்திப்பதின் முக்கியத்துவத்தை அறிந்த பின்னர் அத்திட்டம் நம் வாழ்வில் நிறைவேறுவதைக் காண இயலும்.

## உங்கள் சிந்தனைகளை நீங்கள் கட்டுப்படுத்த முடியும்

உங்கள் சிந்தையை நீங்கள் மாற்ற முடியாது என்று ஒரு காலத்தில் நான் யோசித்துக் கொண்டிருந்தது போல நீங்களும் இப்பொழுது யோசித்துக் கொண்டிருக்கலாம். அது சரியல்ல. நீங்கள் எதைச் சிந்திக்க வேண்டும் அல்லது வேண்டாம் என்று தெரிந்தெடுக்கலாம்; இந்தத் தெரிந்தெடுப்பை ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டும். மனம் எங்கே போகிறதோ, மனிதனும் அதன் பின்னாலே போகிறான். நாம் உண்ணப்போகிற எதையாகிலும் குறித்து சிந்திக்கத் துவங்கிய அனுபவம் நம்மெல்லாருக்கும் உண்டு. ஒருவேளை ஐஸ்கிரீம் அல்லது அதுபோன்ற கவர்ந்திழுக்கும் ஏதேனும் ஓர் உணவு வகை, அதைக்குறித்து எவ்வளவதிகமாக சிந்திக்கிறோமோ அந்த அளவுக்கு

முனைப்பாக அதை அடைந்தாக வேண்டுமென்று தீர்மானிக்கிறோம். நாம் அதிகநேரம் எடுத்து அதைச் சிந்தித்தால், நாம் தானாக காருக்குள் ஏறி, பலமைல் தூரம் போய் அதை வாங்கி விடுவோம்; அதன் பின் அதைச் சாப்பிட்டுவிட்டோமோ, நேரத்தையும் பணத்தையும் வீணடித்தோமே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருப்போம்.

பிறர் நமக்கு தீங்கு இழைத்தால் நாம் அதை மீண்டும் மீண்டும் நினைத்து சிந்தித்துக் கொண்டிருந்தால் நாம் நம்மிலேயே கோபம் கொண்டவர்களாகி குழப்பம் அடைந்து விடுவோம். நம்முடைய சிந்தனைகள் நம் உணர்வுகளைப் பாதிக்கிறது. அவைகளே நம் வார்த்தைகளாகவும் மாறுகிறது.

அடுத்த தடவை நீங்கள் குழப்பமாகவோ வருத்தமாகவோ இருக்கும் பொழுது, எதைக் குறித்து யோசித்துக் கொண்டிருந்தீர்கள் என்று நீங்களே உங்களைக் கேட்டுப் பாருங்கள். உங்கள் சிந்தனைகளுக்கும், உணர்வுகளுக்கும் இடையே ஒரு நேரடி தொடர்பு உண்டு என்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள்.

சிந்தையாகிய யுத்தக் களத்தில்தான் நாம் சாத்தானுடன் போர் புரிகிறோம். தவறான சிந்தனைகளையும், கற்பனைகளையும் தகர்த்து நிர்மூலமாக்கி, அவைகளை இயேசு கிறிஸ்துக்குள்ளாக சிறைப்படுத்த வேண்டும் என்றும் 2 கொரி. 10:4-5 நமக்குபோதிக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தையின்படி சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவினுடைய உபதேசங்களுக்கு பொருந்தாத எந்த ஒரு காரியத்தையும் சிந்தையினின்று களைந்தெரிந்து பிசாசினிடத்தின்று வருகிற பொய் என்று கண்டு அதை புறக்கணிக்க வேண்டும். உங்கள் விரோதியாகிய சாத்தான் உங்கள் சிந்தையைக்

கட்டுப்படுத்துவானானால் உங்கள் வாழ்வையும் விதியையும் அவன் கட்டுப்படுத்தி விடுவான்.

உதாரணமாக தற்கொலை எண்ணங்கள் உங்களுக்கு இருந்தால் அது தேவனால் உங்கள் சிந்தையில் விதைக்கப்பட்டதல்ல. நீங்கள் சுகமாய் வாழ வேண்டும் என்பதையே தேவன் விரும்புகிறார். நீங்கள் ஒன்றிற்கும் உதவாதவர்கள் அல்லது உங்களை யாரும் நேசிப்பதில்லை போன்ற எண்ணங்கள் உங்களுக்கு வந்தால் அவைகள் தேவனிடத்திினின்று வருகிறவைகள் அல்ல. ஏனெனில் அவை தேவனுடைய வார்த்தையோடு ஒத்துப் போகிற எண்ணங்கள் அல்ல.

## எதிர்மறையான சிந்தை

எதிர்மறையான சிந்தையைக் குறித்து மிகவும் ஜாக்கிரதையாய் இருங்கள். தேவனைப் பற்றியோ அவர் உங்கள் வாழ்க்கைக்காக வைத்துள்ள திட்டத்தைப் பற்றியோ எந்த எதிர்மறையான காரியமும் இல்லை. பாதி அளவுக்கு நிரப்பப்பட்டுள்ள ஒரு டம்ளெரைப் பார்க்கும் போது, அதைப் பாதி காலியானது என்று பார்ப்பதைவிட பாதி நிறைந்த ஒரு பாத்திரமாகப் பார்ப்பது நல்லது. நேர்மறையாக இருக்கும் யாரையும் பாதிக்காது.

உங்கள் வாழ்க்கை இதுவரை எப்படி இருந்தது என்பது பொருளல்ல; உங்கள் எதிர்காலத்தைக் குறித்து ஒரு நேர்மறையான தரிசனம் இருந்தாக வேண்டும். தேவனோடு உடன்பட்டு, உங்களுக்கு நன்மையான காரியங்கள் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் இருங்கள். நான் ஒரு காலத்தில் இருந்தது போல நீங்களும் ஒரு எதிர்மறையான நபராக இருந்தால் நேர்மறையாக சிந்திப்பதற்கு சில பயிற்சிகள்

தேவைப்படலாம். நான் மிகவும் எதிர்மறையான ஒரு சூழ்நிலையில் எப்பொழுதும் பிரச்சனைகளையும், வேதனைகளையும் எதிர்பார்க்கக்கூடிய ஒரு நிலையில் வளர்க்கப்பட்டவள். ஆனால் பின்னர்தான், நாம் எதிர்மறையாக சிந்திப்பதின் மூலம் நமக்கு பிரச்சனைகள் வரலாம் என்று அறிந்து கொண்டேன்.

> சிறுமைப்பட்டவனுடைய நாட்களெல்லாம் தீங்குள்ளவைகள் (கவலை நிறைந்த எண்ணங்களால்) மனரம்மியமோ நித்திய விருந்து (சூழ்நிலைகளைப் பொறுத்ததல்ல).
>
> — நீதிமொழிகள் 15:15

முதலில் பரிசுத்த ஆவியானவர் என்னை இந்த வசனத்திற்கு நேராக நடத்திய போது நான் அதை புரிந்து கொள்ளாமலிருந்தாலும், பின்னர் அந்த தீங்கு என்பது ஏதோ கெட்ட காரியங்கள் நிகழப்போகிறது என்கிற எதிர்மறையான பயம் நிறைந்த சிந்தைகளால் உண்டாகிறது என்பதை புரிந்து கொண்டேன். நான் எப்பொழுதும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பிரச்சனைகளையே அதிகமாக நான் பெற்றுக் கொண்டேன் என்பதையும் நான் ஒத்துக் கொள்ள வேண்டி உள்ளது. என் வாழ்வு மாற வேண்டுமென்று விரும்பினேன். தேவன் என் வாழ்வை ஏன் மாற்றவில்லை என்பதை நான் புரிந்து கொள்ளாமலிருந்தேன். பின்புதான் என் வாழ்க்கையை தேவன் மாற்ற விரும்பினால் நான் என் சிந்தையை மாற்றியாக வேண்டும் என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டேன்.

எதைக் குறித்தும் எதிர்மறையாக இருக்க வேண்டாம். உங்கள் எதிர்காலத்தைக் குறித்தோ அல்லது உங்கள் கடந்த காலத்தைக் குறித்துக்கூட நீங்கள் தேவனை நம்பினால், தேவனுடைய

முழுமையான திட்டத்தில் உங்கள் கடந்த காலத்தைக் கூட சரியான முறையில் இணைத்துவிட அவரால் முடியும். நீங்கள் இழைத்த எல்லாத் தவறுகளும் உங்களை இன்னும் சிறந்த ஞானமுள்ள நபராக மாற்ற முடியும். நீங்கள் அப்பிழைகளினின்று கற்றுக் கொண்டு மேலும் அவ்வித தவறிழைக்காமல் காத்துக் கொள்ள முடியும். உங்கள் பொருளாதார நிலை, நண்பர்கள், குடும்பம், உங்கள் தோற்றம், உங்களுக்கு இருக்கிற வேலை இல்லாத சூழ்நிலை , வேலை, எங்கு வசிக்கிறீர்கள், எந்த வாகனம் வைத்திருக்கிறீர் மற்றும் எதைக் குறித்தும் எதிர்மறையான எண்ணங் கொள்ளாதீர்கள். ஒரு நேர்மறையான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை நேர்மறையானதாகவும், வல்லமை மிக்கதாக அமைய அது பெரிதும் உதவும்.

## கவலைப்பட்டு கலங்காதீர்

சிந்தையிலே காணப்படும் கவலையும் கலக்கமும் நல்லதல்ல. கவலை எந்த விதத்திலும் நன்மை செய்யாது. உங்கள் பிரச்சனைகள் அனைத்தையும் தேவன் பொறுப்பெடுத்துக் கொள்ளும்படி அவரை நம்பி எல்லா கவலையையும் புறம்பே தள்ளுங்கள். கவலை உங்களை அதிக வயதானவர்கள் போலத் தோன்றச் செய்யும். கவலையானது தலைவலி, வயிற்றுப் பிரச்சனைகள் இப்படி கஷ்டங்களைத் தருவதோடு வாழ்வின் போக்கை கடினமாக்குகிறது. கவலைப்படுவது நம் வாழ்க்கைக்கான தேவசித்தம் இல்லை.

நம்முடைய வாழ்வின் காரியங்களை நாமே பொறுப்பெடுத்துக் கவனிக்கிற பழக்கமுடையவராக இருப்பதாலும், அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு பழகினபடியாலும் கவலைப்படாமலிருப்பது முதலில் கடினமான காரியமாயிருக்கலாம்.

ஆனால் இப்பொழுது ஒரு புதிய வாழ்க்கை முறையைக் கற்றுக் கொள்ளுகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தேவனோடு உறவின்றி வாழுபவர்கள் கவலைப்படவேண்டும் என்று யோசிக்கலாம். ஆனால் நாம் அப்படி யோசிக்க வேண்டியதில்லை. தேவன் உங்கள் பக்கமாக இருக்கிறார். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் என்று அவரே சொல்லியிருக்கிறார். (1 பேதுரு 5:7).

நாளைய தினத்தைக் குறித்து இன்றே கவலைப்பட்டுக் கொண்டிருப்பதையே இங்கே கலக்கம் என்று குறிப்பிடுகிறோம். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும் என்பதால் அப்படி கவலைப்பட்டு கலங்கக்கூடாது என்று இயேசு சொன்னார் (மத்தேயு 6:34). சரியான நேரம் வரும் போது என்ன செய்ய வேண்டும் என்று நமக்குத் தெரிய வரும். ஒரு வேளை அதுவரைக்கும் என்ன செய்வதென்று தெரியாமலிருக்கலாம். தேவனை நம்புவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர் ஒருபோதும் காலந்தாழ்த்துவதுமில்லை; அதே சமயம், பொதுவாக காலத்திற்கு முன்னமே எதையும் செய்யவுமாட்டார். இப்படி நம்புகிற பழக்கம் இல்லாததினால், புதிய விசுவாசிக்கு இப்படியாக காத்திருப்பது கடினமாக இருக்கும். ஆனாலும் சற்று காலத்திற்குப் பின், இவ்வித வாழ்வை நேசிக்கத் துவங்கிவிடுவீர்கள். உங்கள் மனம் பதறாமல் நிதானமாக இருக்கும். அடுத்தடுத்த காரியங்களுக்காக கவலைப்படாமல் விடுதலையுடன் சுகமாக வாழ்வீர்கள்.

கவலைப்படுவதற்கான சோதனை உங்களுக்குநேரிடும். ஒவ்வொரு முறையும், நீங்கள் தேவனுடைய பிள்ளை என்பதையும்,

அவர் எல்லாவற்றையும் பொறுப்பெடுத்து நடத்துவார் என்பதையும் பிசாசுக்கு நினைப்பூட்டுங்கள்.

உங்கள் மனதை புதிதாக்குவதற்கான வழி தேவனுடைய வார்த்தையை படிப்பதும் தியானிப்பதுமாகும். சரியான மற்றும் தவறான சிந்தனைக்கு இடையிலான வித்தியாசத்தை கற்றுக் கொள்ளும் மார்க்கம் இதுவே. உதாரணமாக, வறுமையான குடும்பத்திலிருந்து வருகிற ஒருவர், தானும் வாழ்நாளெல்லாம் ஏழையாக இருக்க வேண்டுமென யோசிக்கலாம். ஆனால் அது உண்மையல்ல என்பதை வேத வசனத்திலே நீங்கள் கண்டு பிடிப்பீர்கள். தேவ உதவியாலும், அவரின் கோட்பாடுகளை உங்கள் பொருளாதார வாழ்வில் அப்பியாசிப்பதாலும், உங்கள் வாழ்வின் வறுமை சுழற்சியை முறித்து, உங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் நிறைவை பெற்று வாழலாம். எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் ஆத்துமா வாழ்வது போல் நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புவதாக அவருடைய வார்த்தை சொல்கிறது (3 யோவான் 2).

நீங்கள் ஆத்துமாவில் பக்குவமடைந்து, தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் போது, நீங்கள் ஞானமாகவும், சரியாகவும் கையாளத்தக்க ஒவ்வொரு நன்மையையும் அவர் உங்களுக்கு தருவார்.

தேவன் உங்கள் தேவைகளை சந்திப்பார், நீங்கள் பயத்தில் வாழவேண்டியதில்லை. உங்களுக்கு வேலை தேவையானால் ஜெபியுங்கள். ஒரு வேலையை கண்டு கொள்ள அவர் உங்களுக்கு உதவி செய்வார். அவர் உங்களுக்கு தயவு காண்பித்து, நீங்கள் கையிட்டுச் செய்கிற அனைத்தும் செழிக்கும்படியாகவும் ஜெயமடையும்படியாகவும் செய்வார்.

நீங்கள் நன்றாக வாழ வேண்டுமென்று இயேசு விரும்புகிறர். அவர் தாம் மரித்து, உங்களுக்குக் கொடுக்கிற நல்வாழ்வை நீங்கள் அனுபவித்து வாழ வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அறிவை பெற்றுக் கொள்ளுங்கள், புத்தியை பெற்றுக் கொள்ளுங்கள், பகுத்தாராயும் தன்மையைப் பெற்றுக் கொள்ளுங்கள், விவேகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். அறிவில்லாமல் மக்கள் அழிந்து போகிறார்கள். எனவே அந்த அறிவிற்காக அவரை நோக்கி கூப்பிடுங்கள். இயேசு கிறிஸ்துவே நம்முடைய ஞானமாயிருக்கிறார். (1 கொரிந்தியர் 1:31). உங்களுக்குள் உள்ள ஞானம் எழும்பி, உங்கள் மனக்கண்களைப் பிரகாசிப்பித்தருளும்படி அவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள். அப்பொழுது அவருடைய வழிகளில் நடக்க இயலும். "முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல" (நீதிமொழிகள் 8:11).

அதிகமாக விற்பனையாகும் என் புத்தகம் "மனதின் போர்க்களம்," முடிந்தளவு சீக்கிரமாக அந்தப் புத்தகத்தைப் பெற்று நீங்கள் வசிக்கும்படி உங்களை அறிவுறுத்துகிறேன். உங்கள் சிந்தையைப் புதிதாக்குவது கொஞ்சக்காலம் ஓர் யுத்தம் போல் தோன்றலாம். ஆனாலும் அதை விட்டு விடக்கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவனை ஜாக்கிரதையுடன் தேடுகிற அனைவரும் அதற்குத் தக்க பலனைப் பெறுவார்கள்.

அத்தியாயம் 6

# ஒரு புதிய பேச்சின் மார்க்கம்

வார்த்தைகள் வல்லமையை அடக்கி வைத்திருப்பவை. அவைகள் ஆக்கும் சக்தியையோ அழிக்கும் சக்தியையோ சுமந்து வருகிறது. காலத்தின் துவக்கத்தில் தேவன் பேசிய போது நன்மையான காரியங்களைப் படைத்தார். நாமும் அவர் மாதிரியைப் பின் பற்ற வேண்டும்.

> அவனவன் வாயின் பலனால் அவனவன் வயிறு நிரம்பும்; அவனவன் உதடுகளின் விளைவினால் அவனவன் திருப்தியடைவான் (நன்மையாலோ, தீமையாலோ) மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்.
>
> அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள் (மரணம் அல்லது ஜீவன்). — நீதிமொழிகள் 18:20-21

இந்த வேத வசனங்களை கவனமாகப் படிக்கும்போது நம்முடைய வார்த்தைகளுக்கு விளைவுகள் உண்டு என்பது தெளிவாகிறது. சில நன்மையையும் மற்றவை தீமையையும் கொண்டு வரும். நாம் வாயைத் திறந்து பேசும் போது, நம்முடைய வார்த்தைகளுக்கு வல்லமை உண்டு

என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நம்முடைய சிந்தை நம் வார்த்தைகளாக மாறுகிறது. சாத்தான் நம் மனதில் எதிர்மறையான சிந்தனைகளை போடுவதற்கு இது ஒரு முக்கிய காரணம். நாம் சாத்தானுடைய சிந்தனைகளை நம் சிந்தையாகக் கொண்டால் இறுதியில் அவைகளைப் பேசி விடுவோம் என்றும், அதோடு அவன் தன் மோசமான கிரியைகளை நம்மில் நடப்பிப்பதற்கு நாம் அவனுக்குத் திறந்த கதவுடன் இருப்போம் என்றும் அவன் அறிவான்.

> தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்.
>
> — நீதிமொழிகள் 21:23

இந்த உலகத்தில் நாம் காண்கிறவற்றையும் உணருகின்றவற்றையும் பற்றி பேசுவதே நமக்கு நேரிடுகிற மிகப்பெரிய சோதனையாகும். ஆனால் தேவனோ, நாம் என்ன செய்ய முடியும் என்று அவருடைய வார்த்தை சொல்கிறதோ அதைப் பற்றிப் பேச வேண்டும் என்று விரும்புகிறார். உங்கள் சூழ்நிலைகளை நீங்கள் உதறித்தள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. மாறாக அவைகளை மேற்கொள்ள வேண்டும் என்றுதான் சொல்கிறேன். பிரச்சனைகளை சந்திக்கும் போது உங்களுடைய பேச்சு எப்படியிருக்கிறது என்பது மிகவும் முக்கியமானது.

பதினொரு நாள் பயணதூரத்தை கடந்து செல்வதற்காக இஸ்ரவேல் மக்கள் நாற்பது ஆண்டு காலம் வனாந்திரத்தில் செலவிட்டார்கள். அவர்கள் முன்னோக்கிச் செல்லாமல், சுற்றி வந்தமலைகளையே மீண்டும், மீண்டும் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அநேக பிரச்சனைகள் இருந்தன. அவற்றுள் மிகப்பெரிய பிரச்சனை குறை

கூறுதலும், முறுமுறுத்தலுமாகும். அவர்கள் நினைத்தபடி காரியங்கள் நடக்காத போதெல்லாம் முறுமுறுத்துக் குறைகூறினார்கள். நம் வாழ்வில் வனாந்தரத்தில் வலம் வரும் போதும், மலை உச்சியில் வாசம்பண்ணும் போதும் நாம் தேவனை துதித்து, ஸ்தோத்திரஞ்செலுத்த வேண்டுமென்றே அவர் விரும்புகிறார். நாம் பிரச்சனையில் சிக்கிக் கொள்ளும் போது என்ன பேசுகிறோம் என்பதே நாம் எவ்வளவு நாட்கள் அப்பிரச்சனையின் பிடியில் தவிக்கப் போகிறோம் என்பதை தீர்மானிக்கிறது.

இது உங்களுக்கு விநோதமாகத் தோன்றலாம். ஆனால் நிச்சயமாக உங்கள் வார்த்தைகளுக்கு வல்லமை உண்டு. இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைக்கிறவராயிருக்கிற தேவனையே நாம் சேவிக்கிறோம் என்று ரோமர் 4:17 கூறுகிறது. தேவன் என்ன நடக்க வேண்டுமென விரும்புகிறாரோ, அதைப் பார்த்து அதுநடந்து விட்டது போல பேசுகிறார். இதைச் செய்வதற்கு, நாம் விசுவாசக் கண்களால் தரிசிக்க வேண்டும். நாம் இன்னமும் இயற்கையாக காணவும், உணரவும் முடியாததை, விசுவாசமானது நிஜம் போல் கண்ணோக்குகிறது. விசுவாசமானது தேவ வாக்குத்தத்தங்களை எடுத்து, அவைகளை உண்மையாகப் பாவிக்கிறது.

நமக்கு ஒரு பிரச்சனை இருந்தால், அதிலிருந்து தேவன் நம்மை மெய்யாகவே விடுவிப்பார் என்று நம்புவோமானால் நாம் சந்தோஷமாக இருப்போம். மாற்றம் நடக்கும் வரைக்கும் நாம் காத்திருக்கத் தேவையில்லை. ஏனெனில் விசுவாசத்தால் காரியம் நிகழ்ந்திருக்கிறது. நம் உள்ளத்தின் ஆழத்தில் தேவன் நமக்காககிரியை செய்து கொண்டிருக்கிறார் என்று நமக்கு நன்றாகவே தெரியும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி சுற்றிலும் பார்த்தபோது அவர் கண்டதெல்லாம் செத்து, உலர்ந்து போன எலும்புகள் மாத்திரமே. தேவன் அவரைப் பார்த்து அவைகள் உயிரடையுமா என்று கேட்கிறார். "தேவரீர் அதை அறிவீர்" என்று எசேக்கியேல் பதிலுரைக்கிறார். அதற்கு பிரதியுத்தரமாக தேவன் எசேக்கியேலைப் பார்த்து, அந்த எலும்புகளை நோக்கி தீர்க்கதரிசனம் உரைக்கும்படிக்கும், அவைகள் கர்த்தரின் சத்தத்தைக் கேட்கச் சொல்லும்படிக்கும் கட்டளையிட்டார். எசேக்கியேல் தான் பெற்ற கட்டளைப்படியே தீர்க்க தரிசனம் உரைக்கிறார்; அப்பொழுது அந்த எலும்புகள் ஒன்றாகக் கூடி வருகிறது. மாம்சமும் நரம்புகளும் அவைகளின் மேல் வருகிறது. அவர்கள் ஒரு பெருந்திரள் சேனையாக எழும்பி தங்கள் பாதங்களை ஊன்றி நின்றன (எசேக்கியேல் 37). இது தேவ வார்த்தையின் வல்லமையை விவரிக்கும் மிகச் சிறந்த உதாரணம்.

## தேவனுடைய வார்த்தையை உரக்கச் சொல்லுதல்

தேவ வார்த்தையை உரக்கப் பேசும்படி நான் ஒவ்வொரு இடத்திலும் ஜனங்களுக்கு சொல்லிக் கொடுக்கிறேன். தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்த காரியங்களுள் இது மிக முக்கியமான ஒன்று. அப்படிச் செய்வது என் மனதைப் புதுப்பிக்கவும், என் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றவும் உதவியது என்று நான் சொல்ல முடியும்.

தேவனுடைய வார்த்தை ஆவியின் பட்டயம், சாத்தானுக்கு எதிராக நீங்கள் பயன்படுத்தும் மிகப் பெரிய ஆயுதம் இதுவே. தேவ வார்த்தைக்கு அவன் அஞ்சி நடுங்குகிறான். லூக்கா நான்காம்

அதிகாரத்தில் இயேசு பிசாசினால் சோதிக்கப்படும் ஒரு நேரத்தை நாம் பார்க்கிறோம். அவர் வனாந்தரத்தில் இருந்தார். அநேக நாட்களாக ஒன்றும் உண்ணவில்லை. சாத்தான் அவரின் சிந்தையில் பல எண்ணங்களைப் போடுகிறான். ஒவ்வொரு முறை பிசாசானவன் இயேசுவிடத்தில் பொய் சொல்லும் போதும் "எழுதப்பட்டிருக்கிறதே" என்று இயேசு பதிலுரைத்து ஒரு வேத வசனத்தை உரக்கக் கூறி அந்த பொய்யை வீழ்த்தினார். நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்றும் போது,நாமும் வெற்றியின் பாதையில்தான் இருக்கிறோம்.

நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதை கவனித்துப் பார்க்க ஆயத்தமாக இருக்கிறீர்களா? அப்படியிருந்தால், நீங்களும் மற்றவர்களைப் போலவே, உங்கள் வாழ்க்கையில் நிச்சயம் நடக்கக் கூடாது என நினைக்கிற அநேக காரியங்களையும் நீங்கள் பேசுவதாகக் கண்டு கொள்வீர்கள். நாம் பேசுகிற முறையைப் பொறுத்து, நம்முடைய சந்தோஷ, சமாதான நிலையை அதிகரிக்கவும் குறைக்கவும் செய்யலாம் என நான் நம்புகிறேன். நான் சொல்வது சரியென்றால் நம்மை சந்தோஷப்படுத்துகிற காரியங்களை விட்டு விட்டு ஏன் வருத்தமளிக்கும் காரியங்களைப் பேச வேண்டும்?

விசுவாசத்தில் பேசுவது என்பது உங்கள் புதுவாழ்வின் ஒரு பகுதி. கீழ்க்கண்டவை போன்றவற்றை நீங்கள் பேசலாம்:

தேவன் என்னை நேசிக்கிறார்.
என் வாழ்க்கைக்கென ஒரு நல்ல திட்டமும் வைத்திருக்கிறார்.
நான் போகிற இடமெல்லாம் எனக்குதயவு கிடைக்கும்.
நான் கையிட்டுச் செய்கிற அனைத்தும் வளமாகவும்.
ஜெயமாகவும் அமையும்.
தேவன் சரியான வாசல்களை எனக்கு திறப்பார்;

தவறான வாசல்களை மூடுவார்.
நான் ஞானத்தில் நடக்கிறேன்.
நான் சமாதானத்தால் நிறைந்திருக்கிறேன்.
நான் சந்தோஷமாயிருக்கிறேன்.
நான் அன்பில் நடக்கிறேன்.
இன்றைய தினம் ஏதாகிலும் நன்மை எனக்கு நடக்கும்.
என் பிள்ளைகள் எல்லாம் தேவனை நேசித்து சேவிப்பார்கள்.
என் திருமண வாழ்வு நாளுக்கு நாள் சிறப்படையும்.
நான் போகிற இடத்திலெல்லாம் ஆசீர்வாதமாக இருக்கிறேன்.

இப்படி இந்த பட்டியல் முடிவில்லாமல் நீண்டு கொண்டே போகும். தேவனுடைய வார்த்தை சொல்லுகிறதைத்தான் நீங்கள் சொல்லுகிறீர்கள் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். தேவனுடன் உடன்பட்டு ஜீவிப்பது உங்களுக்கு ஒரு புது உலகத்தைத் திறந்து கொடுக்கும். அது தேவனுடைய திட்டத்தைச் செயற்படுத்தும்; பிசாசானவன் அதைத் தடுத்து நிறுத்த ஒன்றும் செய்ய முடியாது.

அத்தியாயம் 7

# உங்களைப் பற்றிய ஒரு புதிய கண்ணோட்டம்

உங்களை நீங்கள் எப்படிப்பார்க்கிறீர்கள்? உங்களைப் பற்றிய சுய கண்ணோட்டம் உங்கள் இருதயத்தின் பொக்கிஷப் பெட்டியில் நீங்கள் வைத்திருக்கும் போட்டோ போன்றதாகும். மக்கள் தங்களைத் தாங்களே அதிகமாக விரும்புவதில்லை என்பதை என்னுடைய அநேக ஆண்டுகால ஊழியத்தில் நான் கண்டுபிடித்திருக்கிறேன். நான் பல ஆண்டுகளாக என்னோடு கூட வைத்திருந்த உறவு மிகவும் மோசமானதாக இருந்தது.

அது என் வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் பாதித்தது. தேவன் நம்மை நேசிக்கிறார், நாம் நம்மையே நேசிக்க வேண்டுமென அவர் விரும்புகிறார். சுய லாபமான விதத்திலோ,சுயத்தை மையப்படுத்தும் விதத்திலோ அல்ல, மாறாக நலமான வழியில் அப்படிச் செய்ய வேண்டுமென விரும்புகிறார். உங்களிடத்தில் இல்லாததை நீங்கள் கொடுக்க முடியாது. தேவன் நம்மில் அன்புகூறுகிறார். முதலாவதுஅந்த அன்பு நம்மை குணப்படுத்த வேண்டுமென்றும், பின்பு அதே அன்பு நம் மூலமாக பிறருக்குக் கடந்து செல்ல வேண்டுமென்றும் விரும்புகிறார். நீங்கள் உங்களில்

சரியாக அன்பு செலுத்தி, தேவன் உங்களுக்கென வைத்திருக்கும் அன்பைப் பெற்றுக் கொள்ள மறுப்பீர்களானால் நீங்கள் உண்மையாகப் பிறரை ஒருக்காலும் நேசிக்க முடியாது.

நீங்கள் என்ன சாதிக்கிறீர்களோ அதைப் பொறுத்து உங்களைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் அமைகிறதா? நம்மில் அநேகர் அப்படித்தான் இருக்கிறோம். நம்முடைய சாதனைகள் தொடர்ந்தேர்ச்சியாக நன்றாக இல்லாதபடியால் நம்மைப்பற்றி நாம் கொண்டுள்ள அபிப்பிராயமும் நன்றாக இருக்க முடியாது. நாம் குறைவுள்ள மனித ஜீவராசிகள், நாம் தவறு செய்கிறோம். நாம் காரியங்களை நன்றாகச் செய்ய விரும்புகிறோம், ஆனால் அநேக நேரங்களில் எல்லாவற்றையும் சிக்கலாக்கிவிடுகிறோம். அதனால்தான் நமக்கு இயேசு தேவை. நம்முடைய பலவீனங்களில் அவர் தம் பெலத்தை பூரணமாக விளங்கச் செய்கிறார்.

நீங்கள் தேவனுக்கு ஒரு ஆச்சரியமில்லை. அவர் உங்களை தம்மோடு ஒரு உறவு நிலைக்கு அழைத்த போது நீங்கள் எப்படியிருந்தீர்கள் என்று அவர் அறிவார். நாம் வாழ்வில் செய்யப்போகும் ஒவ்வொரு தவற்றையும் அவர் ஏற்கனவே அறிந்திருந்தும் நம்மை எப்படியும் நேசிக்கிறார். நீங்கள் உங்கள் மீதே கடினமாய் இருக்க வேண்டாம். அனுதினமும் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் எழுந்து தேவனுடைய மகிமைக்காக உங்களால் முடிந்ததை செய்யுங்கள். அவரை நீங்கள் நேசிக்கிறபடியால் உங்களால் முடிந்த சிறந்ததை அவருக்கு செய்யுங்கள். அவருடைய அன்பைப்பெற்றுக் கொள்வதற்காக அல்ல. அவர் உங்களை இப்பொழுதும் எவ்வளவு நேசிக்க முடியுமோ அவ்வளவாக இப்பொழுதும் உங்களை நேசித்துக்

கொண்டிருக்கிறார். உங்கள் மேலிருக்கும் அவருடைய அன்பு பரிபூரணமானது. ஒவ்வொரு நாளின் இறுதியிலும் உங்கள் பாவங்களையும் தவறுகளையும் தேவன் மன்னிக்கும்படி அவரிடத்தில் கேட்டு நன்றாக இரவில் உறங்கி அடுத்த நாளை புத்துணர்வுடன் தொடங்குங்கள்.

சாத்தான் உங்களுக்கு எதிராக இருக்கிறான். ஆனால் தேவன் உங்களுக்காக இருக்கிறார். நீங்கள் தேவன் பக்கமாக இருக்க வேண்டும். இருவர் ஒன்று சேரும் போது அவர்கள் மிகுந்த வல்லமையுடையவர்கள் ஆவார்கள். நீங்கள் தேவனுடைய பார்வையில் அருமையானவர்கள். தேவனுக்கென்று பயன்படக்கூடிய அநேக தாலந்துகள் உங்களிடத்தில் உண்டு. உங்களைப் பற்றிய ஒவ்வொரு காரியமும் தவறு என்று யோசித்துக் கொண்டே இருக்க வேண்டாம். இன்னும் எவ்வளவு தூரம் வரை செல்லும் என்று நோக்கிக் கொண்டே இருக்க வேண்டாம். எவ்வளவு தூரம் வரை கடந்து வந்திருக்கிறோம் என்பதை நோக்கிப் பாருங்கள். நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், உங்கள் வாழ்வின் அதிசயகரமான அனைத்திற்கும் ஆரம்பம் இதுவே.

## நீதியைப் புரிந்து கொள்ளுதல்

நீதி (தேவனோடு சரியான நிலையில் நிற்பது) இயேசுவை விசுவாசிப்பதின் மூலம் வருகிறது. நம்முடைய கிரியைகளால் வருவதல்ல. இது தேவனுடைய ஈவு, இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் நேரத்தில் அது உங்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

வேதாகமத்தில் அநேக வசனங்கள் இவ்விதமாகச் சொல்கிறது. உங்களை உற்சாகப்படுத்தும் ஒருசிலவற்றை உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன்.

> நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு (அவருடைய நற் தன்மையால், நாம் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவரோடு சரியான உறவு நிலையில் இருப்பது) பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்.
> — 2 கொரிந்தியர் 5:21

ஆஹா! மாபெரும் வேதவார்த்தை! கிறிஸ்து பாவமற்றவராக இருந்தும், நம்மீதுள்ள தம் அன்பினிமித்தம் நம்முடைய பாவத்தை அவர் சுமந்து கொண்டு நாம் பிதாவாகிய தேவனுடன் ஒரு பெரிய உறவை ஏற்படுத்திக் கொள்ளும்படி செய்தார். நாம் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளபடியால் தேவன் இப்பொழுது நம்மை அங்கீகரிக்கப்பட்டவர்களாக, ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக தம்மோடு சரியான உறவு நிலையில் இருப்பவர்களாகக் காண்கிறார். நான் மீண்டும் சொல்ல வேண்டும்... ஆஹா!

தேவனை வருத்தப்படுத்தி விட்டோம், கோபமாயிருக்கிறார் என்று பயப்படுவதற்குப் பதிலாக நாம் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் என்று அறிந்து “கிறிஸ்துவுக்குள்” நாம் அவர் முன் நிற்க முடியும்.

> இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு (வெறுமனே அறிந்து கொள்ளுதல் அல்ல, மனந்திரும்புதல், விசுவாசம், பரிசுத்த நடக்கை இவற்றை நோக்கி நடத்துகிற

பாவத்தோடுள்ள நெருக்கம்) நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால் எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. — ரோமர் 3:20

அது இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும் வித்தியாசமே இல்லை.

— ரோமர் 3:22

கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்கு கிறிஸ்து இயேசுவின் மேல் விசுவாசிகளானோம். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை.

— கலாத்தியர் 2:15,16

நீங்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் மூலம் தேவனோடு சரியான நிலையில் இருக்கிறீர்கள் என்று உங்களை நீங்கள் கண்டு கொள்வது உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியம். இது தேவனுடைய ஈவு. நாம் நம்மைப் பற்றியே மோசமாக எண்ணிக் கொண்டிருந்தால், தேவன் நம்மீது கோபமாக இருபபாரோ என்று எண்ணிக் கொண்டிருந்தால், அவர் நமக்குத் தர இருக்கும் வல்லமையை இழந்துவிடுகிறோம். இயேசுவை விசுவாசிக்கிறவர்களாக நாம் பிசாசின் மீது அதிகாரம் உடையவர்களாக இருக்கிறோம். ஆனால் நாம் தேவனுக்கு முன்பாக

குற்ற உணர்வு, ஆக்கினைத் தீர்ப்பு ஆகிய கந்தைகளுடன் நிற்காமல், நீதியைத் தரித்துக் கொண்டவர்களாக அவர் முன் நிற்க வேண்டும்.

நீதியை மார்கவசமாக அணிந்து கொள்ள வேண்டும் என்று எபேசியர் 6:14 நமக்குச் சொல்கிறது. ஒரு போர் வீரனுக்கு மார்கவசமானது அவன் இருதயத்தைப் பாதுகாக்கிறது. நீங்கள் உங்களைப் பற்றி என்ன நம்பிக்கையுடன் இருக்கிறீர்கள்? நீங்கள் தேவனோடு கூட விசுவாசத்தால் சரியான நிலையில் நிற்கிறீர் என்று நம்ப முடிகிறதா? நீங்கள் செய்கிற தவறையே நோக்கிப் பார்த்துக் கொண்டிராமல் இயேசு உங்களுக்காக செய்து முடித்ததை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பீர்களானால் அதைச் செய்ய முடியும். நீங்கள் தவறு செய்வீர்கள், அப்படிச் செய்யும் போது, உடனே மனந்திரும்பி, தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள். நாம் நீதியில் நடந்து கொள்வதற்கு இதுவே வழி. நாம் நம்முடைய நீதியிலே நடப்பதில்லை. ஏனெனில் அது அழுக்கான கந்தையாக இருக்கிறது. மாறாக இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தால் வருகிற தேவ நீதியில்தான் நாம் நடக்க முடியும்; அதில்தான் நடக்க வேண்டும்.

நீங்கள் உங்களைப்பற்றி கொண்டுள்ள இந்த அதிசயமான புதுத்தன்மை, இயேசுவை விசுவாசிக்கிறவர் என்ற முறையில் உங்களுக்குக் கிடைத்துள்ள “புதுவாழ்வு” தொகுப்பின் ஒரு பகுதியாகும்.

## உங்களுக்குள் சந்தோஷமாயிருங்கள்

நீங்கள் உங்களுக்குள் இப்பொழுது மகிழ்ந்திருக்கலாம். உங்களைக் குறித்த தேவ சித்தமும் அதுவே. மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் அல்லது என்ன சொல்கிறார்கள் என்பதை

பொறுத்து உங்கள் மதிப்பு அமைவதில்லை. உங்களையோ உங்கள் வாழ்வின் சாதனைகளையோ மக்கள் எப்படி கணக்கிட்டிருக்கிறார்கள் என்பதைப் பொருத்தும் உங்கள் மதிப்பு அமைவதில்லை. தம்முடைய குமாரனை உங்களுக்காக உலகத்திற்கு அனுப்பி, உங்களுக்காக அவரை மரிக்கச் செய்யும் அளவிற்கு நீங்கள் மதிக்கப்படத்தக்கவர் என்று தேவன் நினைத்திருக்கிறார்; அதை நினைத்துக் களிகூறுங்கள்

நாம் வாழ்வில் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்று வேதாகமம் நமக்கு போதிக்கிறது. நாம் நமக்குள்ளாக மகிழ்ந்திருக்க முடியாவிட்டால், நம்மால் அதைச் செய்ய முடியாது. நீங்கள் ஒரு தனி நபராக இருக்கிறீர்கள். உங்களில் இருந்து நீங்கள் ஒரு வினாடி கூட விட்டுப் பிரிந்திருக்க முடியாது. நீங்கள் உங்களுக்குள் மகிழ்ந்திருக்க முடியாவிட்டால் உங்கள் வாழ்க்கை துயரமாகவே இருக்கும்.

என்னைப் போலவே, உங்களுக்குத் தெரிந்த மற்ற மக்களினின்று நீங்கள் வித்தியாசமான ஒரு நபராக இருக்கலாம். அது பரவாயில்லை. தேவன் வேண்டுமென்றே நம்மை அவ்வாறு சற்று வித்தியாசமாக படைத்திருக்கிறார். அவர் பல வகைகளை விரும்புகிறார். நீங்கள் இயற்கைக்கு மாறுபட்ட ஒரு நபரல்ல; நீங்கள் ஒரு தனிச்சிறப்புமிக்க நேரடி படைப்பு – மற்றெந்த பிரதிகளாக இருக்கின்ற அனைத்தையும் விட நீங்கள் விசேஷித்தவர்கள்.

நீங்கள் மற்றவர்களோடு உங்களை ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களுடன் போட்டியிடுவதில் உங்கள் வாழ்நாளை வீணடிக்க வேண்டாம் (2 கொரிந்தியர் 10:12). நீங்கள் இருக்கிற வண்ணமாகவே இருங்கள் - அதற்காக சந்தோஷப்படுங்கள். மற்றவர்களைப் போல நீங்களும் உங்கள் வாழ்வின் பல பகுதிகளிலே

மாற வேண்டியிருக்கும். மிஞ்சியுள்ள உங்கள் வாழ்நாட்காலத்தில் அம்மாற்றங்களை உங்களில் கொண்டுவர பரிசுத்த ஆவியானவர் தீவிரமாகக் கிரியை செய்து கொண்டே இருப்பார். இந்த மாற்றங்களின் கிரியை நடந்து கொண்டிருக்கும் போது தானே நீங்கள் உங்களுக்குள் மகிழ்ந்திருக்கலாம் என்பதே நல்ல செய்தி.

## அத்தியாயம் 8

# பயத்திற்கு பதிலாக விசுவாசம்

பயம் எப்படி இருக்கும் என்று நாம் எல்லோரும் அறிவோம். அது நம்மை (இருகிறதும்) கஷ்டப்படுத்துகிறதும், நாம் முன்னேற்றத்தை தடுக்கிறதுமாக இருக்கிறது. பயம் நம்மை நடுங்கவைக்கிறதும் வியர்க்கப்பண்ணுகிறதும் பலவீனப்படுத்துகிறதும், நாம் எதிர் கொள்ள வேண்டிய காரியங்களிலிருந்து நம்மை ஓட வைக்கிறதுமாக இருக்கிறது.

பயம் தேவனிடத்திலிருந்து வருவதல்ல. தேவன் விரும்புகிற நல் வாழ்க்கை நாம் வாழாதபடி நம்மைத் தடுப்பதற்கு சாத்தான் பயன்படுத்துகிற கருவியே பயமாகும் (2 தீமோத்தேயு 1:7) நாம் விசுவாசத்தால் வாழ வேண்டுமென தேவன் விரும்புகிறார். நாம் முழு ஆள்தத்துவத்தோடும் முற்றிலும் தேவனையே நம்பி, அவரின் வல்லமை, ஞானம், நற்தன்மை அவற்றிலே சார்ந்து விடுவது விசுவாசமாகும். நாம் காணாத காரியங்களின் நிச்சயமும் அவைகளின் உண்மைத் தன்மை பற்றிய உறுதியுமே விசுவாசம் ஆகும்.

ஆவிக்குரிய கோணத்தில் விசுவாசம் கிரியை செய்கிறது. நீங்கள் காண்கின்றவைகளையும், உணருகின்றவைகளையும் மட்டும்

நம்புவதில் பழக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் தேவனுடைய பிள்ளையாக, நீங்கள் காணாத மண்டலத்திலும் (ஆவிக்குரிய கோணத்தில்) சுகமாக வாழத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நாம் தேவனைக் காண்பதில்லை. ஏனெனில் அவர் ஆவியாயிருக்கிறார். ஆனால் நாம் அவரில் உறுதியாக நம்புகிறோம். நாம் தூதர்களைப் பார்ப்பதில்லை. ஆனால் அவர்கள் நம்மைச் சுற்றியிருந்து நம்மைப் பாதுகாக்கிறார்கள் என்று தேவனுடைய வார்த்தை சொல்கிறது.தேவன் மீதும், அவரின் வார்த்தை மீதும் உள்ள நம் விசுவாசத்தை நாம் அப்பியாசிக்கும் போது, நாம் ஆவிக்குரிய மண்டலத்தை அடைந்து, நமக்கு இன்னும் நிஜமாகாமலும்,அதே சமயத்தில் தேவன் வைத்திருக்கிறதுமான நன்மைகளை பற்றி இழுத்து, அவைகளை நம் வாழ்வில் அனுபவிக்க முடியும்.

நம் சூழ்நிலைகளில் நம் கவனத்தை மூழ்கடிக்கச் செய்து மகிழ்ந்து, சாத்தான் நம் எதிர்காலத்தைக் குறித்து நாம் பீதியடையும்படி செய்கிறான். மாறாக நாம் தேவனை நம்ப வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். எல்லாச் சூழ்நிலைகளையும், பிசாசின் எல்லா அச்சுறுத்தல்களையும் விட அவர் பெரியவர் என்று அவரை நாம் நம்ப வேண்டும்.

இக்கட்டான சூழ்நிலைகளில் அகப்பட்டுக் கொண்ட மக்களான அநேகர் வேதாகமத்தில் நிறைந்துள்ளனர். அப்படிப்பட்ட சூழ்நிலைகளால் பயம் அவர்கள் இருதயத்தை நிரப்பிற்று. ஆனால் அவர்கள் தங்கள் விசுவாசத்தை தேவன் மீது வைத்து, மகிமையான விடுதலையை பெற்றார்கள். நீங்கள் பயத்தில் வாழப்போகிறீர்களா? அல்லது விசுவாசத்தில் வாழப்போகிறீர்களா? என்று தீர்மானித்துக்

கொள்ள வேண்டும். நீங்கள் விசுவாசத்தால் வாழத் தீர்மானிக்காவிட்டால் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருக்கிற போதிலும் சகலவித பயங்களாலும் பீடிக்கப்பட்ட துயரகரமான வாழ்வாக உங்கள் வாழ்வு அமையும். நீங்கள் விசுவாசத்தால் இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? அதற்கு அடுத்தபடி விசுவாசத்தால் வாழக்கற்றுக் கொள்ள வேண்டும்.

> விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று (விசுவாசப்பாதை மூலமாகக் காண்பிக்கப்பட்டு இன்னும் அதிக விசுவாசத்தை எழுப்புகிறது) அந்தச் சுவிஷேத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.
>
> — ரோமர் 1:17

நாம் தேவனுடைய அன்பை உணர்ந்து, இயேசுவின் மரணத்தாலும், உயிர்த்தெழுதலாலும் தேவனோடு சரியான நிலையில் உள்ளோம் என்பதைப் புரிந்து கொள்ளும்போது, விசுவாசத்தால் நடப்பது நமக்கு எளிதாகிவிடும். நாமே இதைச் செய்தாக வேண்டுமென்று உணர்வதைவிட தேவன் நம்மைப்பொறுப்பெடுத்துக் கொள்ளுமாறு அவரை நம்புகிறோம்.

பயமற்ற நிலைதான் தைரியம் என்றல்ல, பயம் இருக்கும் நிலையிலும் சரியான செயலில் இறங்குவதுதான் தைரியம். பயப்படாதிருங்கள் என்று தேவன் தம்முடையவர்களுக்குச் சொல்லும் போது, பயத்தை உணராதிருங்கள் என்று அவர்

கட்டளையிடவில்லை. மாறாக என்ன உணர்ந்தாலும், எப்படியும் தமக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதையே அவர் கூறுகிறார். பயத்தின் ஆவி தேவனோடு நடக்கிற நம் வாழ்வில் நம்மை முன்னேற விடாது என தேவன் அறிந்திருக்கிறார். அதனால்தான் தம்முடைய வார்த்தையில் அவர் மீண்டும் மீண்டுமாக நம்மோடிருப்பதாக கூறுகிறார். எனவே நாம் பயத்திற்குத் தலைவணங்கத் தேவையில்லை.

“நீங்கள் உண்மையாக நின்று பயத்தின் முகத்தை நோக்கும் ஒவ்வொரு அனுபவத்திலும் பெலனையும், தைரியத்தையும், உறுதியையும் பெற்றுக் கொள்ளுகிறீர்கள். நீங்கள் செய்ய முடியாது என்று நினைக்கிறதை நீங்கள் செய்ய வேண்டும்” என்று எலியானோர் ரூஸ்வெல்ட் கூறினார்.

> நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள். அவர்களுக்குப் பயப்படவும், திகைக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடே கூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னை கைவிடுவதுமில்லை.
>
> — உபாகமம் 31:6

விசுவாசம் மட்டுமே தேவனைப் பிரியப்படுத்தும். நாம் விசுவாசத்தால் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்கிறோம். ஆகையால் கிறிஸ்துவில் உள்ள புதிய விசுவாசி, விசுவாசத்தைக் கற்றுக் கொள்வதும், அதில் நடக்கத் துவங்குவதும் மிகவும் முக்கியமானது. உடலில் தசையை பலமாக வளர்ப்பதுபோலவே பலமான விசுவாசமும் வளர்க்கப்பட வேண்டும். உங்கள் விசுவாசத்தை படிப்படியாக வளர்க்கிறீர்கள் - ஒவ்வொரு

முறையும் இன்னும் கொஞ்சம் விசுவாசம் பெலப்பட்டுக் கொண்டே வருகிறது.

விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று மத்தேயு 17:20 கூறுகிறது. நம்மிலுள்ள சிறிய விசுவாசம் கூட நம் வாழ்வில் வரும் மலைபோன்ற பிரச்சனைகளை நீக்கிவிடும். ஒருவேளை நீங்கள் உங்கள் வாழ்நாளெல்லாம் பிரயாசப்பட்டு, உங்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முயற்சித்து, கடைசியில் குழப்பத்துடனும், ஏமாற்றத்துடனும் இருக்கலாம். அப்படியிருப்பீர்களானால், நீங்கள் ஒரு புதிய ஆரம்பத்தின் முனையில் இருக்கிறீர்கள். நீங்கள் இப்பொழுதே தேவனோடு பேசி (ஜெபித்து) உங்கள் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அனைத்து காரியங்களிலும் அவர் ஈடுபட அவரை அழைக்கும்போது, மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும் என்று கண்டு கொள்வீர்கள்.

உங்கள் விசுவாசத்தின் படியே உங்களுக்கு ஆகக்கடவது (மத்தேயு 9:29). உங்கள் வாழ்நாளின் பெரும் பகுதியும் பயத்தில் வாழ்ந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது தேவனில் உள்ள விசுவாசத்தை வைத்து அந்த பயத்தை புறம்பாக்குங்கள். புதிய வழிகளை கற்றுக் கொள்ள சற்றுக் காலம் எடுக்கலாம். ஆனால் விட்டு விடாமலும் சோர்ந்து போகாமலும் இருங்கள். படிப்படியான வளர்ச்சியாகிய நியமத்தின்படியே பூமியில் உள்ள அனைத்தும் செயல்படுகிறது. தேவன் சொல்லுகிறவைகளை நாம் செய்வோமானால், ஒவ்வொன்றும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டே இருக்கும்.

அத்தியாயம் 9

# வாழ்க்கை அனுபவியுங்கள்

திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.

— யோவான் 10:10

நாம் வாழ்வை ஆனந்தத்துடன் அனுபவிக்கும்படியாக இயேசு மரித்தார். அதனால் நம் வாழ்வில் நினைப்பதெல்லாம் அப்படியே கிடைத்து விடுமென்றோ நமக்கு வாழ்வில் எந்த கஷ்டங்களும் இருக்காது என்றோ பொருளல்ல. இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் தேவனோடு வைத்துள்ள உறவின் மூலமாக, உலகில் உள்ள உங்கள் துயரத்திற்கு மேலாக நீங்கள் எழும்பி, பரிசுத்த ஆவியின் வல்லமை வாயிலாக தேவனாலும், தேவனோடும் தேவனுக்காகவும் வாழுகின்ற ஒரு உயிர்த்தெழுதலின் வாழ்வைப் பகிர்ந்து கொள்வீர் என்பதாகும்.

தேவன் நம்முடைய உண்மையான வாழ்வாயிருக்கிறார். நாம் அவருக்குள் வாழ்கிறோம், அசைகிறோம். நம் ஜீவனைக்

கொண்டிருக்கிறோம். தேவனில் மகிழ்ச்சியாயிருக்கக் கற்றுக் கொள்வோமானால், அது நம் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் மகிழ்ந்து கொண்டாட வழி செய்யும். அவரோடு உள்ள ஐக்கியத்தைக் கொண்டாடுங்கள். உங்கள் வாழ்வோடு சம்பந்தப்பட்ட அனைத்து காரியங்களிலும் தேவன் அக்கறை உள்ளவராக இருக்கிறார். உங்களைப்பற்றிய அனைத்தையும் அவர் சீராக்குவார் என்று வேதாகமம் சொல்கிறது. உங்களைத் தம்முடைய சித்தத்திற்குள் இன்னும் முழுமையாகக் கொண்டு வரும்படி அவர் எப்பொழுதும் உங்கள் வாழ்வில் கிரியை செய்து கொண்டே இருக்கிறார்.

தேவனைப்பற்றி தவறான முறையில் பயந்து கொண்டே இராதேயுங்கள். அவரை கனப்படுத்துகிற அந்த தேவ பயம் நமக்கிருக்க வேண்டும். அவரை மதித்து அவர் சர்வவல்லவர் என்றறிந்து அவர் கூறிய அனைத்தும் உண்மை என்று உணர்ந்து அவருக்கு பயப்படவேண்டும். ஆனால் நாம் ஒவ்வொரு தவறு செய்யும் போதும் நம்மேல் அவர் கோபமாக இருப்பார் என்றோ, நாம் மிகச்சரியாக இருக்கத் தவறி விடும் போதெல்லாம் நம்மை தண்டிக்கப் போகிறார் என்றோ எண்ணி பயப்பட வேண்டியதில்லை.

தேவன் இரக்கமுள்ளவர், கோபம் கொள்வதில் நிதானமாய் இருப்பவர். அவர் நீடிய பொறுமை உடையவர், அவர் நம் உருவத்தை அறிகிறார். நம் பலவீனங்களையும் குறைகளையும் புரிந்து கொள்கிறார்.

நீங்களும், எங்களைப் போன்ற ஒரு நபராக இருந்தால், உங்கள் வாழ்விலும் ஆள்தத்துவத்திலும் அநேக மாற்றங்கள் தேவைப்படும் – தேவன் அவைகளை மாற்றுவார். ஆனால்நல்ல செய்தி

என்னவென்றால் தேவன் அதைச் செய்து கொண்டிருக்கும் போதே நீங்கள் தேவனில் மகிழ்ந்து ஆனந்தமாயிருக்கலாம்.

உங்கள் வாழ்வு இப்பொழுது எப்படியிருக்கிறதோ, அதே நிலையில் உங்கள் வாழ்வு முடிவடையக் கூடாது என விரும்பலாம். என்ன இருந்தாலும் இப்பொழுது இருப்பது இந்த ஒரு வாழ்க்கைதான். எனவே அதில் ஆனந்திக்க ஆரம்பியுங்கள். நன்மையான காரியங்களை முக்கியப்படுத்துங்கள்; எல்லாவற்றிலும் நன்மையானதைக் கண்டு கொள்ள கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் குடும்பத்திலும், நண்பர்களிலும் மகிழ்ந்திருங்கள். அவர்களைப் பிரித்தெடுத்து, நீங்களே அவர்களை மாற்றுவதில் தீவிரம் காட்டாதிருங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள் - தேவன் அவர்களை மாற்றட்டும்.

உங்கள் வேலையில் மகிழ்ந்திருங்கள். இல்லத்தில் மகிழ்ந்திருங்கள். உங்கள் அன்றாட சாதாரண வாழ்வில் மகிழ்ந்திருங்கள். நீங்கள் தேவனை நம்பி, ஒரு நல் மனப்போக்கைக் கொண்டிருக்கும் போது இது சாத்தியமாகும். உங்கள் கண்கள் தேவன் மீது பதிந்திருக்கக் கூடும் – உங்களிலோ உங்கள் வாழ்விலோ உங்கள் குடும்பத்திலோ, உலகத்திலோ உள்ள தவறுகள், குறைகள் மீது உங்கள் கண்களை வைக்க வேண்டாம். தேவன் உங்களுக்கு ஒரு நல்ல திட்டம் வைத்திருக்கிறார்; அதைச் செயல்படுத்த அவர் ஏற்கனவே கிரியைத் துவங்கி விட்டார். நன்மையான காரியங்கள் வரப்போகிறதை நீங்கள் இப்பொழுதே நோக்கிப் பார்த்தவர்களாக முன்னதாக களிகூர்ந்து மகிழுங்கள்.

தங்கள் வாழ்க்கையில் ஏதேனும் பிரச்சனை உள்ளவரைத் தங்களால் மகிழ்ந்திருக்க முடியாது என்று நம்புகிறவர்கள் போல

அநேகர் இருக்கிறார்கள்.ஆனால் அது ஒரு தவறான சிந்தனை. உங்கள் கடந்த காலத்தின் தவறுகளிலோ வருத்தங்களிலோ குடிகொண்டிராதேயுங்கள். இயேசு கிறிஸ்து மூலமாக உங்களுக்கு கிட்டியிருக்கிற அந்த மாபெரும் எதிர்காலத்தைக் குறித்துத் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருங்கள். நீங்கள் மகிழ்ந்திருக்க வேண்டுமென்று தீர்மானிக்கிற அனைத்திலும் நீங்கள் மகிழ்ந்திருக்கலாம். வாகனப் போக்குவரத்து நெரிசலின் மத்தியில் கூட நீங்கள் நினைத்தால் மகிழ்ச்சியோடு இருக்கலாம். நான் உங்களுக்குப் புதிய வாழ்வின் வழியைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாலும், வாழ்க்கையைக் குறித்துள்ள உங்கள் மனப்பான்மை இதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நான் எங்கே போய் கொண்டிருக்கிறேனோ, அதை நோக்கிப் போய் கொண்டிருக்கும் போதே, இப்போது எங்கே இருக்கிறேனோ அதில் மகிழ்ந்திருக்க கடைசியாக கற்றுக் கொண்டேன்; அதையே நீங்களும் செய்யும்படி உங்களிடத்தில் வலியுறுத்துகிறேன். தேவன் உங்களிடத்தில் செய்ய வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு; அவற்றை அவர் செய்து கொண்டிருக்கும் போது நீங்கள் நிர்பந்தமாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புவதில்லை. குழந்தைகள் எப்படிப் பெரியவர்களாக வளர வேண்டுமோ அப்படியே கிறிஸ்தவர்களும் வளர வேண்டும். இந்த முறைமை நாம் நினைக்கிறதைவிட அதிகமான நேரத்தை எடுக்கலாம். இந்த பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் நாம் மகிழ்ந்திராமலிருக்கக் கூடாது.

இன்றே நீங்கள் பூரணராகிவிட வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கவில்லை. உண்மையில் நீங்கள் இந்த பூமியில் வாழும் வரை பூரணராக முடியாது என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருக்கிறார். ஆயினும் நாமெல்லாரும் தொடர்ந்து இலக்கை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டுமென அவர் எதிர் பார்க்கிறார். ஒவ்வொரு நாள் காலையும், நாம் எழுந்து தேவனைச் சேவிக்க நாம் சிறந்ததைச் செய்ய வேண்டும். நாம் நம்முடைய தோல்விகளை ஒத்துக் கொண்டு, நம் பாவங்களுக்கு மன்னிப்புக் கோரி, அவைகளை விட்டு மனந்திரும்பி வாழ வாஞ்சிக்க வேண்டும். நாம் இதைச் செய்வோமானால், மீதியுள்ளதை தேவன் செய்வார். அவர் தம்முடைய பரிசுத்த ஆவி மூலம் நமக்குள் கிரியை செய்து கொண்டே இருப்பார். அவர் நமக்கு கற்றுக் கொடுப்பார். நம்மை மாற்றுவார், நம்மைப் பயன்படுத்துவார். நீங்கள் ஒரு புதிய வாழ்க்கைக்குள் பிரவேசிப்பீர்கள். ஒருக்காலும் இதைக் குறித்து வருத்தப்படமாட்டீர் என நம்புகிறேன். தேவனில் மகிழ்ந்திருங்கள். உங்களில் மகிழ்ந்திருங்கள். இயேசு மரித்து உங்களுக்கென கொடுத்த வாழ்வில் மகிழ்ந்திருங்கள்.

# இரட்சிப்புக்கான ஒரு ஜெபம்

*பிதாவாகிய தேவனே, நான் உம்மை நேசிக்கிறேன். நீர் என் பாவங்களை மன்னிக்கும்படி நான் இன்று உம்மண்டை விசுவாசத்தால் வருகிறேன். இயேசுவே, நான் உம்மை நம்புகிறேன். நீர் என் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தீர் என்றும், உம்முடைய குற்றமற்ற இரத்தத்தை எனக்காக சிந்தினீர் என்றும், நீர் என் ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டு,எனக்கு வரவேண்டிய தண்டனையை நீர் ஏற்றுக் கொண்டீர் என்றும் நம்புகிறேன். நீர் மரித்தீர். அடக்கம்பண்ணப்பட்டீர். மூன்றாம் நாள் மரித்தோரினின்று உயிரோடு எழுந்தீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். மரணம் உம்மை பிடித்து வைத்திருக்க முடியவில்லை. நீர் சாத்தானை மேற்கொண்டு, பாதாளம், மரணம் இவற்றின் திறவுகோல்களை அவனிடத்தினின்று கைப்பற்றினீர். நீர் என்னை நேசித்ததினிமித்தம் இவைகளையெல்லாம் செய்தீர் என நான் நம்புகிறேன். நான் கிறிஸ்துவை உடையவனாக மாற விரும்புகிறேன். என் வாழ்நாளெல்லாம் நான் உம்மையே சேவிக்க விரும்புகிறேன். நீர் எனக்கு வாக்குப் பண்ணியுள்ள புதிய வாழ்வை எப்படி வாழ்வது என*

*கற்றுக் கொள்ள விரும்புகிறேன். இயேசுவே, இப்பொழுது நான் உம்மை ஏற்றுக் கொண்டு என்னையே உமக்கு கொடுக்கிறேன். நான் இருக்கிறவண்ணமாக என்னை ஏற்றுக் கொண்டு, நான் எப்படிப்பட்டவனாக இருக்க நீர் விரும்புகிறீரோ அப்படி என்னை மாற்றும்.*

*இயேசுவே, நீர் என்னை இரட்சித்ததற்காக உமக்கு நன்றி. உம்முடைய பரிசுத்த ஆவியால் என்னை நிரப்பி நான் அறிய வேண்டிய ஒவ்வொன்றையும் எனக்கு கற்றுத் தாரும். நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்றும், நான் மறுபடியும் பிறந்திருக்கிறேன் என்றும், நான் மரிக்கும் போது பரலோகத்துக்குச் செல்வேன் என்றும், நான் இப்பொழுது நம்புகிறேன். பிதாவாகிய தேவனே, என் வாழ்வின் பயணத்தை இனிமையாக்கி, உம்முடைய மகிமைக்காக வாழ்வேன்!*

# ஆதாரமும், அறிவுரைகளும்

உங்கள் புதுவாழ்வில் நீங்கள் கற்று வளரும்படி உங்களுக்கு உதவ அநேக ஆதாரங்களை வைத்து இருக்கிறோம். இந்த ஆதாரங்களின் பட்டியலை நீங்கள் கேட்பீரானால், அது உங்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். நீங்கள் எங்களின் மாத இதழை கேட்டுப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அதுவும் முதலில் பல மாதங்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

என் புத்தகங்களாகிய Battlefield of the Mind (மனதின் போர்களம்) மற்றும் How to succeed at Being Yourself (நீங்களாக எப்படி இருப்பது) இரண்டையும் அதிகமாக உங்களுக்கு சிபாரிசு செய்கிறேன். இயேசு சிலுவையில் உங்களுக்காக என்ன செய்தார் என்பதைப்பற்றியும், அவரைப் பின்பற்றுகிற விசுவாசி என்கிற முறையில் உங்களுக்கு கிடைக்கக்கூடியதான வல்லமை பற்றியும் நல்ல ஒரு திடமான அடிப்படை உங்களுக்கு அமைவதற்கு The Word, The Name, The Blood (வார்த்தை, நாமம், இரத்தம்) என்கிற புத்தகம் உதவும்.

நல்ல ஒரு தொடர்ச்சியான போதனைக்கு உதவும் Pressing In And Pressing நுற் கேசட்டாகவும், குறுந்தகடு (CD) ஆகவும் கிடைக்கிறது.

உங்கள் வார்த்தைகளின் வல்லமையை விளங்கிக் கொள்வதற்கு ஏதுவாக The Mouth (வாய்) என்கிற தொடர் உள்ளது. நாங்கள் வேறு ஏதேனும் வழிகளில் உங்களுக்கு உதவ வேண்டுமென நீங்கள் விரும்பினால் தயவு செய்து எங்கள் அலுவலகத்தை தொலைபேசி மூலம் தொடர்ப்புக் கொள்ளுங்கள். தேவன் உங்களை நேசிக்கிறார், அதேபோல் நாங்களும் உங்களை நேசிக்கின்றோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

# ஆசிரியரைப் பற்றி

ஜாய்ஸ் மேயர் அவர்கள் உலகப்பிரசித்திப்பெற்ற வேதாகமப் போதகர்களுள் ஒருவராவார். நியூயார்க் டைம்ஸின் சிறப்பாக விற்பனையாகும் ஆசிரியரான அவருடையப் புத்தகங்கள், பலலட்சக்கணக்கானவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கையையும், மீட்பையும் கண்டடைய உதவியுள்ளன. ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் மூலம் பல தலைப்புகளைப் பற்றி அவர் போதிக்கின்றார், அதில் மனம், வாய், மன நிலை, மனப்பான்மை ஆகியவற்றிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர் போதிக்கின்றார். அவருடைய வெளிப்படையான உரையாடும் நடையானது, அவருடைய தனிப்பட்ட அனுபவங்களை வெளிப்படையாகவும், நடைமுறைக்கேற்றப்படியாகவும் பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது. இதனால் கேட்கிறவர்கள் அவர் என்ன வாழ்க்கையில் கற்றுக் கொண்டாரோஅதை அவர்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த ஏதுவுண்டாகிறது. ஜாய்ஸ் அவர்கள் சுமார் 100 புத்தகங்களை எழுதியுள்ளார். அவை 100 மொழிகளில் மொழிப்பெயர்கப்பட்டுள்ளது. அவர் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ பன்னிரெண்டு உலகளாவிய மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகளை நடத்துகின்றார், இதன்மூலம் மக்கள் தங்கள் அனுதின வாழ்க்கையை அனுபவிக்கப் போதிக்கின்றார். கடந்த 30 ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடைபெறும் அவருடைய பெண்கள் கருத்தரங்குக்கு சுமார் 20 லட்சம் பெண்கள் உலகெங்கிலுமிருந்து கலந்துக் கொள்கின்றனர். கஷ்டப்படும் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஜாய்ஸின் வாஞ்சை தான் "நம்பிக்கையின் கரம்" என்ற தரிசனத்திற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கிறது, இது ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் ஊழியப் பணி கிளையாகும், இது அவருடைய ஊராகிய செயின்ட் லூயிலும் உலகின் பல்வேறு இடங்களிலும் நடைபெறும் அருட்பணிகளை தாங்கிவருகின்றது.

நீங்கள் எங்களுக்கு எழுதும் போது உங்களின் அனுபவ சாட்சியையும் அல்லது இந்த புத்தகத்தின்று நீங்கள் பெற்றுக் கொண்ட உதவியையும் சேர்த்து எழுதுங்கள். உங்கள் ஜெபக்குறிப்புக்களையும் எங்களுக்கு அனுப்புங்கள்.

To contact the author in the United States, please write:
Joyce Meyer Ministries
P.O. Box 655,
Fenton, Missouri 63026
or call: (636) 349-0303
or log on to: www.joycemeyer.org

To contact the author in India, please write:
Joyce Meyer Ministries
Nanakramguda,
Hyderabad - 500 008
or call: 2300 6777
or log on to: www.jmmindia.org

## உங்கள் நித்தியத்தை எங்கே செலவிடுவீர்?



அநேக மக்கள் இன்றைக்கு என்ன நடக்கிறது என்பதைப் பற்றி அல்லது இன்னும் சில மாதங்களில் என்ன நிகழப்போகிறது என்பதைப்பற்றி மட்டும்தான் கரிசனை கொள்கிறார்கள். மிஞ்சிப்போனால் இன்னும் சிலர் வேலையில் ஓய்வு பெற்ற பின் தங்கள் நாட்களை எப்படி சுகமாக செலவிடுவது என்பதைப்பற்றி அக்கறை கொள்கிறார்கள். ஆனால் மரணத்திற்கு பின் உள்ள வாழ்வு பற்றி என்ன? நீங்கள் அதற்கு ஆயத்தம் தானா?

மாம்சமான உங்கள் உடல் ஒரு நாள் மரித்துப் போனாலும் உங்கள் ஆவி நித்தியமாகத் தொடர்ந்து வாழும். உங்கள் ஆவி பரலோகத்தில் தங்கப்போகிறதா? அல்லது நரகத்திலா? என்பதை தீர்மானிப்பது நீங்கள் இவ்வாழ்க்கையில் தீர்மானிக்கும் தெரிந்தெடுப்புகளே. இந்த புத்தகத்தில், மிக அதிகமாக விற்பனையாகும் புத்தகங்களை எழுதுபவராகிய ஜாய்ஸ் மேயர் நீங்கள் சரியான தீர்மானத்தை எடுக்கும்படிக்கு தேவனின் இரட்சிப்பின் திட்டத்தைக் கோடிட்டு காண்பிக்கிறார்.

### அன்புடனும் பொறுமையுடனும் அவர் கற்றுக் கொடுப்பது:

- இயேசுவின் வரலாறு - அதன் முக்கியத்துவம்.
- நம்பிக்கை மனதில் அல்ல-எவ்விதம் இருதயத்தில் அமைகிறது.
- நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள எதை நம்ப வேண்டும்.
- உங்கள் புது வாழ்வை எப்படி தொடங்குவது.

இன்னும் காலம் தாமதிக்க வேண்டாம். ஒரு புதிய வாழ்க்கைப் பாதையை கண்டு பிடிப்பதற்கு இதுவே தக்க சமயம்.

JOYCE MEYER MINISTRIES® | Nanakramguda, Hyderabad - 500 008